REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம் — விய — சித்திரை ௩௦, 12–5–'46 — ஞாயிறு | இதழ் 40

JAFFNA COLLEGE LIBRARY MAY 20 1946 VADDUKODDAI, CEYLON

# இலங்கைக்கு நற்காலம்?

## அரிசிவிலை அதிகரிக்கலாம்

[கொழும்பு நிருபர் கடிதம்]

**அரிசி யாத்திரையுடன் குதிரைப் பந்தயத்திலும் இடுபட்ட சேர் ஒலிவர் குணத்திலகா, பத்திரமாக ஊர் திரும்பியிருக்கின்றார். புதிய சம்பளத்திட்டத்தை ஆராய்ந்து இம்மாதம் 21-ந் திகதியன்று அரசாங்க சபைக்குச் சமர்ப்பித்துவிட்டு அவசர அவசரமாக மீண்டுஞ் சீமைக்குப் பறக்கப்போகின்றார்.**

இலங்கை மக்களுக்கு இவ்வளவு சேவைகள் செய்யும் சேர் குணத்திலகா அங்கிங்கு ஓடாமல் வீட்டில் இருந்து நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமெனப் பலருங் கருதுகின்றனர். இங்கிலாந்தில் இவர் தங்கிவிடக் கூடுமென்ற பயமும் இங்குள்ளவர்களுக்கு இருக்கின்றது. புதிய பார்லிமென்டில் சேர் ஒலிவர் நிதிமந்திரியாகப் பதவி வகிப்பார் என்ற அபிப்பிராயம் வலுப்பெற்றுக் கொண்டிருக்கையில் இவர் இலங்கையின் ஏகப்பிரதிநிதியாக லண்டனிலே தங்குவார் என்ற கதையும் எட்டுகின்றது.


இலங்கைக்கு இப்போதெல்லாம் வெள்ளி துலாராசியில் நிற்பதாக சேர் ஒலிவர் கூறுகின்றார். போதிய உணவு கிடைக்கப் போவதைக் குறித்தோ, அல்லது 'டொமினியன்' அந்தஸ்துக் கிட்டப்போகின்றதென்பதையுணர்ந்தோ இந்தக் குதூகலம் என்பது இன்னுந் தெரியவில்லை. உணவு மகாநாடு முடிந்தவுடன் இவர் ஊர் திரும்பியிருக்க வேண்டும். ஆனல், குடியேற்ற நாட்டு மந்திரி ஸ்ரீ ஜோர்ஜ் ஹோல் அரசாங்க சபைப் பிரமாணஞ் சம்பந்தமாக சேர் ஒலிவருடன் கலந்தாலோசிக்கப் பெரிதும் விரும்பியபடியால் சிறிது தாமதம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகின்றது.

சேர் ஒலிவரின் வரவை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். புதிய சம்பளத் திட்டம்பற்றி இவர் செய்யவேண்டிய திருத்தங்களும் மாற்றங்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் ஏனையோருக்கும் அநேகமாகவமாற்றத்தைக் கொடுக்கமாட்டாதெனச் சொல்லப்படுகின்றது.

இப்போது,மீண்டும்நிதிக்காரியதரிசியாகத் தமது வேலையைத் தொடர்ந்து நடத்தும் சேர் ஒலிவர் இம்மாத முடிவில் லண்டனுக்குச் சென்று இலங்கைத் தேயிலை, றப்பர், கொப்பறு விஷயமாகப் பேச்சுக்கள் நடத்துவார.

### உணவுப்பொருள்கள் விலையேறுமா?

அரிசி, அமெரிக்கன் மா, மிளகாய் உட்பட இன்னும் அநேக உப உணவுப் பொருள்களின் விலை விரைவில் அதிகரிக்கலாம். இது நம்பத்தக்க செய்தி. பிரதிமாதமும் அரசாங்கத்துக்கு உப உணவுப் பொருள்கள் மூலமாக அதிக நஷ்டம் ஏற்பட்டுவருவதால் அதை ஒருவாறு சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கின்றது. அரிசி சம்பந்தமாக அடைந்த நஷ்டத்தை இவ்வளவு காலமாகக் கோதுமை மாவும் சீனியும் தாங்கிவந்தன. இப்போது நிலைமாறி, மா விற்பனையிலும் அரசாங்கம் மாதமொன்றுக்கு 15 இலட்சம் ரூபாய் நஷ்டமடைகின்றது. உப உணவுப் பொருள்களாற் பிரதிமாதமும் உண்டாகும் நஷ்டம் ரூ. 55 இலட்சமெனக் கூறப்படுகின்றது. ஆகவே, அரசாங்கம் ஒருவேளை சகல உணவுப்பொருள்களின் விலைகளையும் சிறிதளவு உயர்த்தக் கூடும்.



சேர் ஒலிவர் குணத்திலகா

### கள்வர் கூட்டமா?

அரசாங்கசபைப் பிரதிநிதிகளைப்பற்றி ருசிகரமான பல விஷயங்கள் எட்டுகின்றன. அரசாங்க சபை—'கள்வர் வதியும் குகை' யென அரசாங்கசபைப் பிரதிநிதி ஒருவர் பகிரங்கக் கூட்டமொன்றிற் பேசும்போது குறிப்பிட்டதாகப் பத்திரிகையிற் படித்தோம். சமீபத்திலே துறைமுகத்தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்தார்களல்லவா? தொழிலாளர் கூட்டமொன்றில் இப்படிப் பிரதிநிதி ஒருவர் பேசினர் என்று தெரிகின்றது. போக்கு வரத்து மந்திரிக்குக் குறித்த பிரதிநிதியின் பிரசங்கத்தை எழுதி அனுப்பியிருக்கின்றார்களெனவும், மந்திரி அப்பிரதியை அரசாங்கசபை முதல்வருக்குச் சமர்ப்பித்திருக்கின்றார் என்ற சமாச்சாரமும் எட்டியிருக்கின்றது. அரசாங்க சபை 'கள்வரின் குகை' என்று அறிந்தவுடன் தலைவர் என்னயோசனை செய்வாரோ தெரியவில்லை?

### கையிற் காசில்லை

இலங்கை மந்திரி ஒருவர் சில நாட்களுக்குமுன் தமது காரை விலைக்கு விற்றிருந்தார். பணம் இன்னும் கைக்கு வந்துசேரவில்லை. மந்திரியின் பேரிலேதான் கார் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனல் இதுவரை 'லைசென்ஸ்' புதுப்பிக்கப்படவில்லை. ஆகவே, மந்திரி நகரசபை அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றார். மந்திரி மீது வழக்குத் தொடரலாமென்றால் மேலிடத்து அதிகாரிகள். "சற்றுப் பொறுங்கள்: இருந்து பார்க்கலாம்" என்று சொல்லுகின்றார்களாம். இப்படி அநேக நாட்கள் பறந்துசென்று விட்டன. கார் வாங்கியவர் பணங் கொடுத்தபாடுமில்லை. காரைத் தேடிப்பிடிக்கவும் முடியவில்லை. நகர மண்டபத்துக் கருகே எங்கோ ஓர் இடத்தில் கார் பத்திரமாக விருப்பதாகவும் ஒரு வதந்தி. மந்திரி காரையும் இழந்தார்; பணத்தையும் இழந்தார். போதாக் குறைக்கு 'லைசென்ஸ்' புதுப்பிக்கப்படவில்லை யென்ற குற்றத்துக்கும் ஆளாகியிருக்கின்றார்? அட பரமசிவமே!

### காரியதரிசிக்கு ஜே!

இலங்கைத் தமிழர் காங்கிரஸின் பருத்த தூணை டாக்டர் சிவசுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸினின்றும் விலகிக்கொண்டார். காங்கிரஸின் செயலாளராக விருந்து முழு மூச்சாக இவர் தான் காரியங்களைப் பார்த்தவர். இப்போது தமிழ்க் காங்கிரஸினின்றும் விலகியிருப்பதுடன் வகுப்புவாதக் கட்சிகளுக்குப் புதிய அரசியலில் இடமில்லையென்றும் உணர்ந்திருக்கின்றார். அப்படியிருந்தும் அவருடைய சகாக்கள் அவரைத் தங்களுடன் வைத்துக்கொள்ளப் படாதபாடுபட்டார்கள். ஒன்றும் வாய்க்கவில்லை, எத்தனை குத்துக்கரணங்கள் போட்ட விடத்தும் மீண்டும் பெரிய கூட்டங்கள் நிகழ்த்தக் காங்கிரஸ் திட்டம் போட்டிருக்கின்றது? யாழ்ப்பாணத்தில் ஏதோ அமளி துமளியாகக் காரியங்கள் பார்க்கப்போகின்றார்களாம். தமிழ் மக்களே கவனம்!

COMING OUT SHORTLY

**The Kesari**

NATIONALIST ENGLISH WEEKLY

**Voice of Progressive Lanka**

- *National Independence*
- *Social Emancipation*
- *Cultural Renaissance*

WILL BE ITS WATCH WORDS

SUBSCRIPTION RATES:

**Annual: Rs. 7-50; Six Months: Rs. 4-00**
**Single Copy -/15 Cts.**

The Manager, *KESARI*, Chunnakam, Ceylon.

# 'மனஸ்தாபங்களை ஒழியுங்கள்'

## தமிழ்மக்களுக்கு வேண்டுகோள்

தேசீய தமிழர் சபையின் ஆதரவிற் கடந்த சனிக்கிழமை பிர்பகல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலும், ஞாயிற்றுக்கிழமை சுன்னுகத்திலும், திங்கட்கிழமை (6-5-46) வட்டுக்கோட்டையிலும் பகிரங்கக் கூட்டங்கள் நியாயவாதி ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தன. அரசாங்க சபைப் பிரதிநிதி ஸ்ரீ. மொலமுரே முக்கிய பேச்சாளராக அமர்ந்து இலங்கையின் தற்கால அரசியல் நிலைமைபற்றி விளக்கினார். உள்நாட்டுமந்திரி கௌரவ ஸ்ரீ மகாதேவாவும், அரசாங்க சபைப் பிரதிநிதி ஸ்ரீ நடேசனும் இக் கூட்டங்களிற் பேசினார்கள்.

அன்று யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஏகப்பட்ட ஜனத்திரள். பலத்த கரகோஷத்திற்கிடையே ஸ்ரீ மொலமுரே பேசியதாவது; எவ்வித கட்சியையுஞ் சேர்ந்த ஒரு தலைவனுமல்ல; என்னைப் பின்பற்றுவதற்கு ஒரு பெரிய கோஷ்டியுமில்லை. அன்றேல் நானொரு மந்திரியுமல்ல. நான் ஒரு தனி மனிதன். நாட்டுக்குச் சிறந்த முறையிற் சேவை செய்வதே எனது நோக்கம். எனது அரசியற் குருவான காலஞ் சென்ற சேர் பொன்னம்பலம் அருணசலம் எனது இதயத்தில் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றார். அவருடைய சகோதரன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் 1915-ம் ஆண்டிலே சிங்களவருக்காக அருந்தொண்டுபுரிந்தார். எமக்கென ஒரு தலைவர் இல்லாது தத்தளித்த காலத்திலே சேர் இராமநாதன் எங்களைத் தாங்கி வழிகாட்டினர். தமிழ் மக்களை நான் எப்போதும் எனது சகோதரர்களாகவே கருதி வருகின்றேன். சிங்களரை நம்பி மோசம் போகவேண்டாம் என்ற உபதேசத்துக்கு யாழ்ப்பாணம் இரையாகிக்கொண்டு வருகின்றது. விரைவிற் தோன்றியிருக்கும் புதிய அரசியற் கட்சியைப் பற்றியும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகை ஒன்று கண்டித்திருக்கின்றது. எங்கட்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டிருக்குமாகில்இப்போதெல்லாம் இலங்கை 'டொமினியன்' அந்தஸ்தைப் பெற்றிருக்கும்.

ஐக்கிய தேசீயக் கட்சி என்ற பெயருடன் உதயமாகும் இக்கட்சியில் வகுப்புவாதிகளுக்கு இடமில்லை. கட்சியின் கொள்கைகளுக்கு இணங்கி நடக்கச் சித்தமுள்ள அத்தனைபேரும் இதிற் சேரலாம். இன்றைய மதிப்பெடுப்பின்படி சிங்களரின் ஜனத்தொகை 70 சத விகிதமாகும். இலங்கைத் தமிழர் 14 சத விகிதம். இந்தியத் தமிழர் 12 சதவிகிதம். நாட்டின் நன்மையைக்கருதிச் சிங்களர் தமிழருடன் ஒத்துழைக்க எப்போதும் தயாராகவிருக்கின்றனர்.

மந்திரி மகாதேவா குறிப்பிட்டதாவது: "தமிழரெனத் தனித்துநின்று புதிய பார்லிமென்ட்டுள் புகுவது ஏற்றதன்று. நாங்கள் ஏற்படுத்த விருக்கும் புதிய கட்சி சாதி சமயபேதமின்றிச் சகலரையுஞ் சேர்த்துக் கொள்ளும். சிங்களர் அனைவரையும் நாங்கள் தூற்றுவது தர்மமாகாது. ஒருவரின் தவறுகளுக்ாகச் சகல சிங்களர் மீதும் பழிசுமத்துவது தவறு."

### சுன்னுகத்தில்:

பழைய மனஸ்தாபங்களையெல்லாம் விட்டுப் புதிய அரசியல் திட்டத்தை நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் ஏற்று நாட்டின் நன்மைக்காக உழைக்கவேண்டுமென, எனது தமிழ்ச் சகோதரர்களை நான் வேண்டுகின்றேன்.' இவ்வாறு ஸ்ரீ மொலமுரே சுன்னுகச் சந்தையில் ஒழுங்குசெய்யப் பெற்ற கூட்டத்திற் பேசும் போது குறிப்பிட்டார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் வழக்கறிஞர் ஸ்ரீ T. S. கனகரத்தினம் தமது இல்லத்தில் ஸ்ரீ மொலமுரேக்கும் மந்திரி மகாதேவாவுக்கும் ஒரு தேநீர்விருந்தளித்தார். பின்னர் மேளவாத்தியத்துடன் அனைவரும் கூட்டம் நிகழ்ந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகம் தலைமைவகித்தார். ஸ்ரீ மொலமுரே பேசியதாவது: இலங்கையின் அரசியல் முன்னேற்றம் சிங்களர் தமிழராகிய இரு சாகியத்தினரதும் ஒத்துழைப்பிலே தான் முற்றுந் தங்கியிருக்கின்றது. நான் கண்டி நாட்டுச் சிங்களவன். ஆகவே எனது உடம்பில் தமிழ் இரத்தம் இருக்கத்தான் செய்கின்றது. இதையிட்டு நான் பெருமை கொள்ளுகின்றேன். ஐம்பதுக் கைம்பது அரசியற் கொள்கையை நான் ஆதரிக்கவில்லை. அப்படியிருந்தும் வடமாகாணத்துக்கும் கீழ்மாகாணத்துக்கும் அதிகமான தொகுதிகள் ஏற்படுத்த வேண்டுமென அரசாங்கசபையிற் பேசியிருக்கின்றேன். சோல்பெரி விசாரணை சபைக்கும் இதுபற்றிச் சாட்சியம் அளித்துள்ளேன். எனது சமாதான ஒழுங்கைத் தமிழர் ஏற்றிருந்தால் இன்று அதிகமான ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

இலங்கை டொமினியன் அந்தஸ்தையடைய வேண்டுமானால் சிங்களர்—தமிழர் ஒற்றுமை அத்தியாவசியமாகின்றது.

புதிய அரசியல், கட்சி முறையின் பாற்பட்டது. இப்போது ஆரம்பிக்கப்படும் ஐக்கிய தேசீயக் கட்சி ஒன்றுதான் செல்வாக்கு மிகுந்ததாக விருக்கு மென்பது எனது கருத்து. வடமாகாணத்து மக்கள் இப்புதிய கட்சியை ஆதரிப்பதுடன் ஒத்துழைப்பார்களென்றும் நான் நம்புகின்றேன். பிற்போக்கான கட்சிகளை ஏற்படுத்தி நாட்டைக் குட்டிச் சுவராக்குபவர்களை இப் புதிய கட்சி கடைசிவரை எதிர்த்துப் போராடியே தீரும்.

ஸ்ரீ மகாதேவா புதிய கட்சியின் அவசியத்தை வற்புறுத்தித் தமிழரைச் சிங்களருடன் ஒத்துழைக்கும்படி வேண்டினர்.

ஐம்பதுக்கைம்பது ஏற்றதல்லவென்பதையுணர்ந்து தாம் தமிழர் காங்கிரஸினின்றும் விலகிவிட்டதாகக் குறிப்பிட்டு ஸ்ரீ நடேசன் பேசியதாவது: ஸ்ரீ மொலமுரேயின் வேண்டுகோளைத் தமிழ் மக்கள் ஆதரித்துச் சிங்களருடன் ஒத்துழைப்பார்களாக. ஸ்ரீ மொலமுரே தமிழ் மக்களின் தோழராவர். எங்களின் தேவைகளைச் சிங்களர் இப்போது கவனிக்கின்றனர். காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை, புத்தூர் நீர்ப்பாசனத்திட்டம் பரவைக்கடல் திட்டம் போன்ற விஷயங்களில் அவர்கள் இப்போது நல்ல சிரத்தை எடுத்திருக்கின்றனர். பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு சிங்களருடன் ஒத்துழைக்க மறுப்பது தமிழருக்கு இழுக்கை விளைப்பதாகும்.

ஈழகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ பொன்னையா அவர்கள் தமது நன்றியுரையிற் குறிப்பிட்டதாவது: "தேசீயக் கட்சியின் அவசியத்தை நான் கடந்த பதினறு ஆண்டுகளாகக் கூறிவந்திருக்கின்றேன். வகுப்பு வாதத்தால் நாடு எவ்வித நன்மையையும் பெறமுடியாதென்பதையும் அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தி வந்துள்ளேன். அந்தக் காலத்திலே ஸ்ரீ நடேசன் அவர்கள் தம்மை ஆதரித்து ஓர் கூட்டத்திற் பேசும்படி கேட்டபோது நான் வகுப்புவாதியல்லவென்றும், நாட்டின் முற்போக்குக்குச் சகல மக்களின் ஐக்கியமும் நல்லெண்ணமும் அவசியமென்றும் அவருக்குத் தெரிவித்தேன். நான் அன்று கூறியதை எனது அன்பர் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது அவர் அதை உணர்ந்து ஐக்கிய தேசீய முன்னணியை ஆதரிப்பது எங்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ✲

● 'ஒன்றை நினைக்கி னது வொழிந்திட் டொன்ருகு' மாம்.

✲ இதனை முதலடியாகக் கொண்டு பாடினராம் ஒரு தமிழ் மூதறிஞர்.

✲ 'அது இன்றொன்ருவதைப்' பலர் தம் வாழ்நாளில் கண்டு கழித்திருக்கிருர்களாம்.

✲ இப்பாட்டை, தேசியக் கல்வித் திட்டத்தைத் தயாரித்த பெரியோர்கள் படிக்கவில்லையாம்.

✲ தேசியக் கல்வியென்ருல் சுவபாஷா மூலம் கல்வி யூட்டுவதாம்.

✲ இதனை ஊட்டுவதற்கு ஆங்கிலந் தெரிந்த ஆசிரியர்கள் தானும் தேவை.

✲ அதுவும் பட்டதாரிகளுக்குத்தான் ஆசிரிய இலட்சணம் உண்டாம்,

✲ இந்த இலட்சணத்தில் சுவபாஷா ஆசிரியர்கள் கலிதொடர் காண்டத்தி லிருக்கின்ருர்களாம்.

✲ ஆங்கில ஆசிரியர்கள் அடுத்த காண்டத்துக்கு வந்துவிட்டார்களாம்.

✲ இதுவும் காலச் சக்கரத்தின் சுழற்சியாம்.

● அரசியலிலும் குருமார் பங்குபற்ற வேண்டுமாம்.

✲ இதனுற் புத்தகுருமார்களிடையே பெரிய பிரிவினை ஏற்பட்டுளதாம்.

✲ இதற்குச் சிருஷ்டிகர்த்தாக்கள் சில சந்தர்ப்பவாதிகளாம்.

✲ சமய ஞானத்துடன் அரசியல் ஞானமும் பெற்று விட்டால் உன்னத புருஷர்களாகிவிடலாமாம்.

✲ இவர்களைப்போன்ற இன்னொரு வர்க்கத்தார் இவர்களுக்கு வழிகாட்டிகளா யிருந்திருக்கிருர்களாம்.

✲ தேர்தற் காலங்களில் இவர்கள்செய்த திருக்கூத்துக்கள் தெருக் கூத்துகளாயிருந்தனவாம்.

✲ இவர்களுக்குப் போட்டியாகத் தான் புத்தகுருமாரும் (பிக்குகள்) கிளம்பியிருக்கிருர்கள் போலும்.

✲ இவர்கள் அரசியலிற் பங்கு பெறக் கூடாதென அனேகர் மல்லுப்பிடிக்கின்றனராம்.

✲ இவர்களுட் சிலர் உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்த அரசியற் றலைவர்களாம்.

✲ முதலிடம் பெற்று நிற்கும் தலைவர்கள், குருமாரின் உதவியாற்ருன் அரசாங்கசபையுட் புகுந்தனராம்.

✲ மறுப்புக்கூட்டங்களில் முக்கியத்துவம் பெறுபவர்கள் இப்போது இவர்கள் தானும்.

● அரசாங்கசபை, கள்வர்களைக்கொண்ட ஒரு குகையாம்.

✲ இதனைச் சொல்லி வைத்தார் திரு தஹநாயகா.

✲ இவரும் அக்குகையில் வசிக்கும் ஒருவர் தானே.

✲ இவர்களை நல்வழிப்படுத்த 'பிக்கு'கள் அங்குசெல்லத்தானே வேண்டுமாம்.

● துறைமுகத் தொழிலாளர்களும் நல்வழிக்கு வந்துவிட்டார்களாம்.

✲ படிப்படியாக யாவரும் வேலைக்குத் திரும்பிவிட்டார்களாம்.

✲ கைக்கெட்டியது வாய்க்கெட்டாத பருவத்திலிருந்த உணவுப் பொருள்களும் பெறக் கூடியதாய் விட்டனவாம்.

✲ உணவுப் பொருள்கள் பெறக்கூடிய நிலைமையிலே தான் அவற்றின் விலையும் கூடப் போகின்றதாம்.

✲ அப்படிச் செய்யாதுவிட்டால் இதுவரையுமடைந்த நட்டத்தை ஈடு செய்ய முடியாதாம்.

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையில் கூடப்படும் யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டு 2457/P இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1946-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப் பட்டிருக்கும் ஆதனம் 1946ம் ஆண்டு ஆனி மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறுபேர்களுக் கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக்காரனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### விபரம்

பருத்தித்துறை
வேலுப்பிள்ளை சோமசுந்தரம்
வழக்காளி

பருத்தித்துறை
1. நாகமுத்து மாணிக்கமும்
2. பெண் முத்தம்மாவும்
எதிராளிகள்

#### ஆதனம்

பருத்தித்துறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை பெரிய பரப்பு. இது உலாந்தா V. சீவரத்தினத்தால் 1945-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15-ந் தேதி 181-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடத்தின்படி குளி 11 $\frac{20}{32}$. அதற்குச் சேர்ந்தவைகளும் சொல்லப்பட்ட படத்தில் X என்று அடையாளமிட்ட கிணறும் B என்று அடையாளமிட்ட வீடும் எல்லை: கிழக்கு, சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு, சதாசிவம் தியாகராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும் பெறுமதி ரூ. 1750/--.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்.

புலோலி கிழக்கு, 9–5–1946.

### கலைமகள் மதுரகான சபா விழா

மேற்படி விழா வடமாகாண அதிபர் திரு. C. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் 23-4-46 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-மணிக்கு சங்கானை ஜெகஜோதி மண்டபத்தில் ஆரம்பமானது. தலைவர் அவர்கட்கு சபாத்தலைவர் மாலை சூட்ட காரியதரிசி பாமாலை ஒன்று பாடிக்கொடுத்தார். அதன் பின் நாடகக்கலை, பண்டைத் தமிழிசை, தென்னிந்திய சங்கீதம் என்னும் பொருள் பற்றி முறையே பண்டிதர் திரு. V. T. சம்பந்தன், முது தமிழ்ப் புலவன் திரு. M. நல்லதம்பி, ஆசிரியர் திரு. P. M. வேதநாயகம் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள். அண்ணுமலை சங்கீத பாடசாலை மாணவன் திரு. K. நமசிவாயம் கோஷ்டியார் சங்கீதக் கச்சேரி நடந்தது. தலைவர் முடிவுரையில் சபாவை ஆசீர்வதித்து இச்சபா இலங்கையில் ஓர் விசேட ஸ்தாபனமாக விருக்க வேண்டுமென்று தான் விரும்புவதாகக் கூறினர்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

### தமிழ் அன்பர்களுக்கு அறிக்கை

தமிழ் முன்னேற்றத்திற்காக ஓர் "இசைத்தமிழ் நிலையம்" உடுவிலில் சங்கீதபூஷணம் (அண்ணுமலை சர்வகலாசாலை) N. சண்முகரத்தினம் அவர்களால் தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையத்தில் மாணவர்களுக்காக உயர்தர சங்கீதம் கற்பிக்கப்படும். தற்போது மாணவர்களின் வசதிக்கேற்ப சுன்னுகம், நாச்சிமார்கோவிலடி (யாழ்ப்பாணம்), யாழ்ப்பாணம், சங்கானை ஆகிய இடங்களிலும் வகுப்புகள் நடத்தப்படும்.

கற்க விரும்பும் மாணவர்கள் நேரிலும் கடிதமூலமும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

N. சண்முகரத்தினம்
உடுவில்.

6–5–1946. [2751—iii]

புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO
COMMERCIAL CO., LTD.
Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2748]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

# இராம இராச்சியம்

## சகோதரர்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

**பதினான்கு ஆண்டு கழிந்த** மறுநாளே வந்துவிடுகிறேன் வந்து இராச்சியப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று கூறியபடி அண்ணன் இராமன் வந்து சேரவில்லை. எனவே எனது பிரதிக்ஞைப்படி என்னுயிரைப் போக்கி எனக்கு ஏற்பட்ட பழியினைத் துடைத்துக்கொள்ளப் போகிறேன். ஆனதால் தம்பி இந்த இராச்சியப் பொறுப்பை ஏற்றுக்கொள்'' என்று சத்துருக்கனைப் பார்த்துப் பரதன் சொல்லுகிறான்.

இச்சொல் விஷமாகக் காதில் விழுகிறது. துயரம் கோபம் ஆத்திரம் என்ன வெல்லாமோ சத்துருக்கனைக் கவ்விக்கொண்டு விடுகிறது. உடல் நடுங்குகிறது; உள்ளம் கொதிக்கிறது; புத்தி தடுமாறுகிறது. உணர்ச்சியற்றுக் கீழேயும் விழுந்துவிடுகிறான். எப்படியோ தள்ளாடிக் கொண்டே எழுகிறான். எழுந்து இல்லாத கோபத்துடன்

அண்ணா நான் உனக்கு என்ன
துரோகம் செய்தேன்?

என்று கேட்கிறான். கேட்டுவிட்டுக் கோபத்தின் வேகம் தணியும்மட்டும் சிறிது பேசாமல் நிற்கிறான். பிறகு தொடர்ந்து பேசுகிறான், கேளுங்கள். அவன் உள்ளக்கிடக்கை மின்னிப் பளிச்சிட்டு நம்மையும் ஆட்கொண்டு விடுகிறது.

கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போனவனைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி "போனவர்கள்
வரும்அவதி போயிற்று'' என்னா
ஆனாத உயிர்விட நின்றமை வானும்
ஒருதம்பி அயலே காணா
யானும்இவ் வரசாள்வன்
என்னே இவ்
அரசாட்சி இனிதே அம்மா

கேட்டீர்களா? சரி.

சாதாரணமாகச் சகோதரர்கள் என்றால் ஒரு குடியில் ஒருவனுக்குப் பிறந்தவர்கள் என்றுதானே நாமெல்லாம் எண்ணுவோம். ஆனால் இராம இராச்சியத்திலே அப்படியா எண்ணுகிறார்கள்.

இராமன் எங்கெங்கோ பிறந்தயார் யாரைஎல்லாமோ உடன் பிறப்பாகவல்லவா பாவிக்கிறான், பழகுகிறான்.

தனது ஒரு மகனைக் காட்டுக்கு அனுப்பியதனால் தசரதனுக்கு என்ன நஷ்டம்? அதனால் தனது புத்திரச் செல்வத்தை மேலுமல்லவா பெருக்கிக்கொண்டுவிட்டான் என்று சொல்வதன் மூலம் தனக்கு சகோதரர்களிடம் இருக்கும் வாஞ்சையை மிக நயமாக வெளிப்படுத்துகிறான் இராமன். இதோ கேளுங்கள் அவன் வாக்கை:

குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை

விபீஷணனை அரக்கர் குலத்தான் என்று சிறிதும் கருதாது உடன்பிறப்பாய்க் கொள்ளுகிறான் இராமன். அதுவும எவ்வளவு இதய சுத்தியோடு என்பதை "உந்தை'' என்ற சொல் மிக நன்றாய் விளக்கி விடுகிறது. அவ்வளவு சிறந்த மனம்; தூயபண்பாடு.

இப்படிப்பட்ட அற்புதமான சகோதரர்களை நாம் எங்கேயாவது காணமுடியுமா என்று வியப்புறுகிறோமல்லவா? முடியும்; நிச்சயமாக முடியும். எங்கே என்று கேட்கிறீர்கள்? வேறு எங்கே? கவிச்சக்கரவர்த்தியின் அற்புத சிருஷ்டியாகிய இராம இராச்சியத்திலேதான்.

## விசுவாசம்

கே. நயினார் முகம்மது

கம்பன் கண்ட இராம இராச்சியம் விசுவாஸம் அல்லது அன்பு என்னும் அடிப்படையின்மேல் அமைக்கப்பட்டது. அறம்அந்த இராச்சியத்தின் உடம்பு என்றால், அன்புதான் அதன் உயிர். இராம இராச்சியத்தின் தலைவனான இராமன் இளமை தொட்டே எல்லோரிடமும் அன்புடையனாக விளங்கினான். இராமன் எழிலுடைப் பொழிலிலும் இனிய நகரிலும் இன்புற்று விளையாடிவரும் போழ்து எதிர்ப்பட்ட மக்களைக் கருணையோடு பார்த்து, நீங்கள் சௌக்கியமா? உங்களின் மனைவியரும் அறிவுடைப் புதல்வர்களும் நலமா? என்று மக்களின் நலத்தை விசாரிப்பான்.

எதிர்வரும் அவர்களை
எமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின்
முகமலர் ஒளிரா
எதுவினை? இடரிலை
இனிதுநம் மனையும்?
மதிதரு குமரரும் வலியர்கொல்?

இராமபிரானின் இன்னுரை கேட்டு மகிழ்ந்த மக்கள் "எங்கள் ஐயனே, யாவரும் சுகமே. உன்னை அரசாகப் பெற்ற எங்கட்கு என்ன குறை? நீ நன்கு வாழ்க'' என வாழ்த்திச் செல்வர். இவ்வாறு இராமன் பன்னீராட்டைச் சிறுவனாயிருந்த பொழுதே தனது குடிகளிடம் விசுவாசத்துடன் ஒழுகினான். அக்குடிகளும் இராமனிடம் அன்பு பாராட்டினர் எனக் கம்பர் கூறி இராமஇராச்சியம் அன்பு இராச்சியம் என்பதற்கு அடிகோலிவிடுகின்றார்.

இராமன் பல்வேறு குணங்களைப் பெற்ற சுற்றம் சூழ வாழ்ந்தவன். அறுபதினாயிரம் ஆண்டு ஆட்சிபுரிந்த தந்தை, மாற்றாந்தாயிருவர் சீற்றமே உருவெடுத்த இலக்குவன், தன்னரிய பெருநீதித் தனியாறுபுக மண்டும் பள்ளமெனும் தகைய பரதன், சாந்தமே உருவாய சத்துருக்கன், ஆன்றவிடந்தங்கிய முனிவரர், உடம்பு போன்று உள்ளமுங் கோடிய கூனி,—இவ்வாறு ஒன்றுக்கொன்று வேறுபட்ட பண்புகளையுடைய குடிமக்களின் இடையே இராமன் அன்புடன் வாழ்ந்தான். அனைவரும் இராமனிடம் விசுவாசம் பாராட்டினர். உள்ளம் கோடிய கூனியைத் தவிர ஒருபொழுதும் யாரும் இராமனிடம் வெறுப்படையவில்லை.

இராமனுக்கு முடி சூட்ட எண்ணிய தசரதன் வசிட்டனை நோக்கிக் குடிகள் அனைவரும் இராமபிரானிடம் விசுவாசமுடையவர்களாயிருக்கின்றார்களா என்று வினவ மெய்மையலது உரையா நாவையுடைய வேதியன், வேந்தே கோசலநாட்டுக் குடிகள் தங்கட்கு எத்தகைய இடையூறு ஏற்பட்டாலும் அதைப் போக்க இராம நாமத்தை யுச்சரிப்பார்கள். அத்துன்பம் இப்பொழுதே யழிந்துபடும். அப்படியிருக்கக் குடிகள் அவனிடம் அன்புடையவர்கள் என்று சொல்வது மிகையல்லவா?

வாரம் என் இனிப் பகர்வது
வைகலும் அனையான்
பேரி னல்வரும் இடையுறு
பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை
வேதியர் முதலோர்
யாரும் யாம்செய்த நல்வினைப்
பயன்என உரையார்

அரசே சுருங்கக்கூறின், "உண்ணும் நீரினும் உயிரினும் அன்னையே உகப்பார் என்று இராமனிடம் எல்லா மக்களும் விசுவாசிகளாயிருப்பதை விளங்க உரைத்தான். வசிட்டன் வாய்மொழியிலும் வேறு சான்று வேண்டா.

இராம இராச்சியத்தின் ஓர் அங்கமான விசுவாசம் இவ்வாரம் ஆராயப்பட்டிருக்கின்றது.

இராமபிரானின் அன்பு தனது குடும்பம் தனது நாடு என்ற அளவில் நிற்கவில்லை. உலகமெல்லாம் விரிந்து நின்றது. கங்கை வேடனாகிய குகனிடம் இராமன் காட்டிய விசுவாசமும் குகன் இராமன் பால் காட்டிய பேரன்பும் வியப்பைத் தருவது. இராமனைக் கண்ட குகன் ஐய மரவுரியும் சடைமுடியும் தரித்த உனது இக்கோலத்தைக் கண்ட எனது கண்களை இன்னும் பிடுங்கி யெறியாதிருக்கிறேன். எனது விசுவாசம் போலிதான்.

"பார்குலாம் செல்வ நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனே யான்''

என்றுவருந்தினான். இவ்வன் புரைகளைக் கேட்ட இராமன் குகனைப் பார்த்து'' நீ, எனது தோழன் இப்பெண் உனது கொழுந்தி, இலக்குவன் உனது தம்பி,'' என்று முறை பாராட்டிய அன்புதான், சிறையிருந்த சீதையின் மனத்திலும் திருமங்கை மன்னன் உள்ளத்திலும் ஊன்றிப் புதைந்து போயிருந்தது. இதே போன்று இராமனுடைய விசுவாசம் எங்கணும் சென்று பரவுகின்றது. இராமன் அன்பால் உலகனைத்தையும் சேர்த்து அணைக்கின்றான். தசரதன் பிள்ளைகள் நால்வர்; குகன் ஐந்தாமவன், சுக்கிரீவன் ஆறாமவன், விபீஷணன் ஏழாமவன் என்று விரல்விட்டு எண்ணுகின்றான். வேடன், குரங்கு, அரக்கன் முதலிய யாவர் மாட்டும் இராமனுடைய அன்பு பரவியிருந்தது. இராம இராச்சியத்தில் மக்கள் அனைவரும் ஓரினமாகின்றனர். சாதிப்பித்தேறிய இந்த நாடு என்று தான் இவ்வுண்மையுணர்ந்து வழிகாட்டப் போகின்றதோ?

அன்றியும் இராமன் பகைவரிடமும் அன்பு பாராட்டினான். பகைவர்களும் இராமன் பால் விசுவாசம் பூண்டனர். வாலி, கும்பகர்ணன், இந்திரஜித்தன், வீடணன் முதலிய அனைவரும் இராமனைப் பாராட்டியுள்ளனர். ஏன்? நேர் வைரியாகிய இராவணனே இராமனைப் பாராட்டுகின்றான் என்றால் வெறு கூறவேண்டா. முதல் நாட்போரில் தோற்ற இராவணன் படைக்கலம் இழந்து நிற்கின்றான். தன் மனைவியை எடுத்துச் சென்ற மாற்றானை அப்பொழுதே அம்பிட்டுக் கொன்றிருக்கலாம். ஆனால் இராமன் கருணை கூர்ந்து "இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்று விடுத்தான். இராவணன் வெட்கத்தோடு திரும்பி வந்து, தன் பாட்டனாகிய மாலியவானிடம் கூறுகின்றான்: ஐய, இராமன் என்னோடு போர் செய்த போதாகட்டும், அரக்கர்களைக் கொன்றபோதாகட்டும், அவனுடைய முகத்தில் சிறிதேனும் கோபக்குறி தோன்றவேயில்லை. கூனியின் கூன்மேல் மண்ணுண்டையை வில்லில் வைத்து எய்த காலத்தின் அவன் முகம் எப்படியிருந்திருக்குமோ அப்படியிருந்தது'' என்றான்

அந்தக் 'கூனிகூன்' போக உண்டை
செறித்தபோ(து) ஒத்த தன்றிச்
சினவுண்மை தெரிந்த தில்லை

என்பது அப்பாட்டு.

இலங்கைப் போர் முடிந்து இராமனுக்கு முடிசூட்டிய பொழுது, ஆங்குக் குழுமியிருந்த மக்கள் தத்தம் தலையைத் தடவிப் பார்த்தார்களாம். தத்தம் தலையிற் கிரீடம் ஏறிவிட்டதென்ற எண்ணம் தான். எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற கொள்கை.

ஒத்தமு வுலகத் தோர்க்கும்
உவகையின் உறுதி யுன்னில்
தத்தம்உச்சியில் வைத்ததுஒத்தது
அத்தாம மௌலி.

இதுதான் கம்பன் காட்டும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட இராம இராச்சியம். (தொடரும்)

# புதுமைக் காதல்

'வேந்தனார்'

1. புதுநலக் கன்னியைக் கூடி—அவள்
புணர்நலச் சுவையினில் ஊறி
மதுமிகப் பருகிடும் அளிபோல்—உளம்
மகிழ்வுறல் ஒன்றுமோ காதல்

2. அன்பினில் ஆரின்று காதல்—உயர்
அறத்தினில் ஆரின்று காதல்
துன்பினைப் பெருக்கிடும் போரால்—உயிர்
துடிக்கின்ற எமக்கேது காதல்.

3. கொலைவினை வெறிகொண்ட மக்கள்—தம்மைக்
கொன்றிடும் போதென்ன காதல்
கலைகளின் ஆய்வெலாம் உயிர்கொல்—புதுக்
கருவிகள் புனைவதோ காதல்.

4. தன்னலம் போற்றிடுங் கொடியோர்—பொருள்
தமக்கெனப் பெருக்கிடுங் காதல்
இன்னலின் ஏழைகள் வாட—உயிர்
எரித்திடும் போதென்ன காதல்.

5. காதலுக் கெனவொரு எல்லை—ஆய்வுக்
கலையினுங் கண்டவர் இல்லை.
ஆதலுக் காம்பணி யெல்லாம்—உயிர்
அனைத்திற்கும் ஆற்றலே காதல்.

6. இந்திரச் செல்வத்தின் இன்பம்—இங்கு
எய்தியே ஒருசிலர் வாழக்
கந்தைக்குங் கஞ்சிக்கும் மக்கள்—நின்று
கதறிடும் போதென்ன காதல்.

7. கடவுளின் அருள்நிலை காதல்—பெருங்
கலைகளின் உயிர்நிலை காதல்
இடமகல் வானத்தைப் போல—ஓர்
எல்லையற் றெழுவதே காதல்.

8. நேருவின் உள்ளமே காதல்—அதில்
நிழலிடும் வீரத்தின் சாயல்
பாரினில் ஏழையென் றில்லை—எனப்
பகர்ந்துநின் றார்க்குமக் காதல்.

9. சாதலை இகழுமக் காதல்—அடிமைத்
தளையினைத் தறிக்குமக் காதல்
ஈதலும் இரத்தலும் இல்லாப்—புது
எழில்உல காக்குமக் காதல்.

10. மணிமுடி வேந்தெனும் வாழ்வைப்—பொய்
வாழ்வென வெறுக்குமக் காதல்
பணிபுரிந் துலகினைக் காத்தல்—அறப்
பயனெனக் கூவுமக் காதல்.

11. காந்தியின் திருவுளக் கதிரால்—உளக்
கட்டவிழ்ந் தலர்ந்ததக் காதல்
ஏந்திய 'சுதந்திரத்' தேனை—உயிர்
இனித்திட ஊட்டுமக் காதல்.




குழந்தை
தன் தோழனை
வுட்வர்ட்ஸ் கிரைப்
வாடரைத் தானகவே
தெரிந்து கொள்கிறது

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

11-WW110-111 TAM W. WOODWARD LTD. LONDON, ENGLAND.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம்: விய, சித்திரை ௩௰


## யாழ்ப்பாணப் பட்டின சங்கம்

சென்ற சில ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பட்டினசங்கம் அடைந்துவரும் கேவல நிலையை நோக்குமிடத்து, மிகப் பரிதாபமடைய வேண்டியதாகின்றது. சங்க அங்கத்தினர்க்கிடையில் ஒற்றுமை நிலை பெருமையாற்றான் இவ்வலங்கோலங்கள் நிகழ்கின்றனவென்பது வெளிப்படை. பட்டின மக்களின் நன்மையை ஓம்புதற்காகத் தெரியப்பட்ட அங்கத்தினர், இவ்விதமாக நடந்துகொள்ளின் காலகதியில் எவ்வளவு தீமைகளும் நட்டங்களும் வந்தெய்துமெனச் சொல்லவும் வேண்டுமோ? இவர்கட்கிடையில் ஏற்பட்ட வேற்றுமையை உபயோகித்துச் சங்கத்தின்கீழ் வேலைகளைச் செய்வோரும் தமது கடமைகளைச் செய்யாது விடுகின்றனர். இறுதியில் எல்லா நட்டங்களும் பட்டினப் பொதுமக்களையே சாருகின்றன.

இச்சங்கத்தின் பரிபாலனத்திலிருக்கும் மின்சார உற்பத்திச்சாலையில் இடைவிடாது தொந்தரவுகள் நிகழ்ந்து வருவது பிரசித்தம். பட்டின சங்கத்தினர் இந்த வேலைத்தலத்திலுள்ள உத்தியோகத்தரை அடக்கியாள இயலாதவராயிருப்பது மிகவும் விசனத்தை உண்டுபண்ணுகின்றது. இடைவிடாது தொடர்ச்சியாக மின்சார உற்பத்தி யந்திரம் பழுதடைந்துவிடுகின்றது. பட்டினத்திலுள்ள இல்லங்கள் வெளிச்சமில்லாது பன்முறை கஷ்டமடைய நேரிடுகின்றன. யந்திரம் பழுதடைவதற்குக் காரணத்தைப்பற்றியும் சந்தேகம் ஏற்படுகின்றது. யந்திரசாலையை நடாத்துவோர் வேண்டுமென்று கஷ்டங்களையுண்டாக்கின், அதனால் நட்டங்களையும் வசதிக்குறைவுகளையும் அடைவோர் பொதுமக்களேயாவர். சென்ற சில மாதங்களாக மின்சார விளக்குகள் எந்த நிமிடத்தில்அவிந்துவிடுமோ என எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. இவ்வித அலங்கோலங்களைப் பட்டின சங்கத்தினர் தடுக்கவியலாதாவென்று கேட்கின்றோம்.

கொழும்பு முதலிய பெரிய நகரங்களில் இவ்விஷயமாக இவ்வளவு சங்கடங்கள் ஏற்படாதிருக்க, யாழ்ப்பாணத்தில்மாத்திரம் இந்த அலங்கோலம் ஏன் நிகழவேண்டும்? யாழ்ப்பாணப் பட்டின சங்கம் மாத்திரமல்ல, வேறு பல பட்டின சங்கங்களும் கேவலமாக நடத்தப்படுவதை யாவரும் அறிவர். பட்டின சங்கத் தலைவர் கட்கும் அங்கத்தவர் கட்குமிடையில் இடைவிடாது துவேஷம் நிகழ்வதைக் காண்கின்றோம். இலங்கையிலுள்ள எத்தனையோ பட்டின சங்கங்கள் கூட்டங்களைத்தானும் நடத்தவியலாது வாளாகிடக்கின்றன. ஆனால் பொதுமக்கட்கு மிக்க துயரை விளைப்பதில் எச்சங்கமும் யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தைத் தாண்டிவிட இயலாது. பொறுப்பற்ற சில அங்கத்தினரின் சுயநல நாட்டமே இத் தீமைகளை விருத்தியடையச் செய்கின்றது. ஒரு சிலர்க்காகப் பல்லாயிர மக்கள் தடுமாற்றமடைவதென்பது எவ்வளவு பெரியதுரோகச் செயலாகும்.

ஒரு நாளைக்கா? இரு நாளைக்கா? இந்த அலங்கோலம் நாளாந்தரத்தில் நிரந்தரமாக நடந்துவருவதை எவ்வளவு காலத்துக்குச் சகிப்பது? வரியிறுக்கும் பொதுமக்கள் சலாக்கியங்களைப் பெருதிருப்பது பெரிய பிழையாகாதா? மின்சார விளக்குகள் இல்லாது போவது ஒருபுறமாக, மற்றைய நகரபரிபாலனங்களும் தடைப்படுகின்றனவே. நகரவீதிகள் ஒழுங்கைகள் என்பன மிக்க கேவலநிலையிலுளவாம். பட்டினத்தின் சுகாதார நிலையும் குன்றிவருவதாக எண்ணவேண்டியிருக்கின்றது இதற்கெல்லாம் யாவர் பொறுப்புடையார்? நகரசங்கமும் அதன் தலைவருமே! இவர்கள், தமது கடமையை முறையாக இயற்றவியலாதிருப்பின், மரியாதையுடன் விலகுவதே செய்யக்கூடிய தொண்டாகும். இவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ளாது சங்கத்தினைத் திருத்த முற்படுவது எப்படிச்சாலும்? வருடக்கணக்காக இந்த அலங்கோலம் நிகழ்ந்துவர, இதற்கோர் பரிகாரத்தையும் மத்திய அரசினராவது நகரப் பொதுமக்களாவது செய்யாதிருப்பது நூதனமாகின்றதே. பட்டின மக்கள் விழித்தெழுந்து தமது உரிமையைக்காக்க முன்வரவேண்டும். அப்போதுதான் நன்மை கிடைக்கும்.

இப்பொழுது யாழ்ப்பாணப்பட்டினத்தை இருவர் சர்வாதிகாரிகளாக நின்று பரிபாலிப்பதாக நடிக்கின்றனர். ஒருவர் நகரசபைத்தலைவர். மற்றையவர் மின்சார உற்பத்திச் சாலையினர். இவர்களிருவரும் தத்தம் அதிகாரப் பெருமையைக் காட்டுவதே நோக்காகக் கொண்டுளர். பட்டின சங்கத்தினர்க்கிடையில் ஏற்பட்ட வேற்றுமையின் காரணமாகவே இச்சர்வாதிகாரிகள் தோற்றினர் என்பாம். ஆகையால், இப்படியாகத் தோற்றிய தீமைகள் நீங்க அவசியம் வழிகாண வேண்டும். பட்டின சங்கத்தினர் மின்சார உற்பத்திச் சாலையை நடத்த இயலாவிடின், மத்திய அரசினர் பொறுப்பில் அதை விடுவதே முறை. அத்துடன் பட்டின சங்கத்தலைவர் கௌரவத்துடன் தமதுகடமையை ஆற்றவியலாதிருப்பின் விலகிக் கொள்வதே செய்யத்தக்கது.

## பரம இரகசியம்!

இந்தியா பூரண சுதந்திரத்தை அடுத்த சில நாட்களுள் அடைந்துவிடுமென்பதை இந்திய மக்கள் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் நம்புகின்றது. இப்பெரிய உரிமையை வழங்க பிரிட்டிஷார் இம்முறை பூரண ஆயத்தமாக விருக்கின்றனர். ஆனால் இதனை ஏற்கின்றவர்களாகும் இந்திய மக்கட்கிடையில் இன்னும் இணக்கம் வந்தபாடில்லை. வேற்றுமை அதிகரிப்பதற்குக் காரணராயிருந்தவர் பிரிட்டிஷாரே. அந்த பிரிட்டிஷாரின் மந்திரிகளே இப்போது காங்கிரஸ் சபைக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஒற்றுமையை நாட்டவும் அரிது முயல்கின்றனர். இந்தச் சமரச முயற்சி ஒரு மாதமாக மிக ஆர்வத்துடன் நடந்தும் காரியசித்தி ஏற்பட்டதாக இன்னும் புலப்படவில்லை. இற்றைக்குப் பத்து வருடத்துக்குமுன், ஒற்றுமைப்பட்ட இந்தியாவுக்கே தாம் பூரண சுதந்திரம் வழங்குவதாக பிரிட்டிஷார் கூறியிருப்பின், பாக்கிஸ்தான் என்ற சொல்லும் தோன்றக்காரணமில்லையே. இதுவரையும் ஆலோசனையிடம் டெல்ஹியிலிருந்தது. இப்போது ஸிம்லாவுக்கு மாற்றப்பட்டது. அங்கும் தடைதாமதங்கள் நிகழ்வதாகவே புதினங்கள் கூறுகின்றன. ஆகவே இந்தியா சுதந்திரத்தை அடைவதெப்படி என்பது பரமரகசியமாகவேயிருக்கின்றது. ஆலோசனையின் பேராக எழுந்த விஷயங்களை இப்பொழுது மந்திரி குழுவினர் பிரிட்டிஷ் முதன் மந்திரியாராகும் மேஜர் அட்லிக்குத் தெரிவித்துள்ளார். அவர் எண்ணத்தையறிந்தே அடுத்தபடியாகச் செய்வது யாதென முடிவுசெய்யப்படும். இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இதுவோர் சோதனைக்காலமாகும். பிரிட்டிஷார் பெருமை ஈடாட்டமடையாதிருக்க வேண்டின், இச்சமயத்தில் இந்தியா காலதாமதமின்றிச் சுதந்திரத்தையடையவேண்டும். முஸ்லிம் லீக்கின் நோக்கினை முன்னரே யறிந்த பிரிட்டிஷார் இன்னும் அதனைத் திருப்திப்படுத்த முயல்வது எவ்வளவுபே[illegible] தீர்மானத்தை இன்னும் பரம இரகசியமாக வைத்திருப்பதா?

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

இலங்கையில் இப்போது சங்கங்களுஞ் சபைகளும் மளமள என்று முளை கொள்ளுவதைக் காணலாம். எவ்வித திட்டங்களுமின்றி ஆரம்பிக்கப்படும் இச்சங்கங்கள் ஈற்றில் அரசியல் அரங்கங்களாக மாறி விடுகின்றன. அரசியல் என்றால் பொது ஜனங்களை ஏமாற்றி அரசாங்க சபைக்குள் நுழைவதென்ற சித்தாந்தம் நாட்டில் நிலைகொண்டு விட்டது. மிகக் குறைந்த கால எல்லைக்குள், அதிவிரைவாக எவர் ஒருவர் நாட்டுமக்களை ஏமாற்றி வாக்குகளை வாங்குகின்றாரோ அவர்தான் மகா கெட்டி! சுயநலத்தையே குறிக்கோளாகக் கொண்டு அநேக காரியங்கள் இலங்கையில் நடைபெறுகின்றன.

### நவீன சுயராஜ்ஜியம்!

இப்படியெல்லாம்எழுதும்போது யாழ்ப்பாணத்துப் பேரறிஞர் ஒருவர் ஐம்பதுக்கைம்பது கோஷ்டியினரின் அரசியற் கொள்கையைப்பற்றிக் குறிப்பிட்ட வாசகம் நினைவுக்கு வருகின்றது. பூரண சுயராஜ்ஜியம் வேண்டுமெனச் சாதித்த அச்சபை ஸோல்பெரி விசாரணைக் கோஷ்டிக்குச் சமர்ப்பித்த திட்டத்தில் தேசாதிபதிக்கே சகல அதிகாரங்களையும் அளித்தது. நாட்டு மக்களுக்குச் சிறிதளவு உரிமையும் அதில் மருந்துக்குமில்லை. இந்த மாதிரி அந்த அறிஞர் தமிழ்க் காங்கிரஸின் பூரண சுயராஜ்ஜியத்தைப்பற்றிக் கூறியிருந்தார். நிலையான கொள்கைகளும் அப்பழுக்கற்ற அரசியல் ஞானமும் நிறைந்தவர்களே தலைவர்களாக முடியும். இலங்கைத் தேசிய காங்கிரஸ்தான் என்ன செய்துவிட்டது?

### உறுதியான தலைவர்

யாழ்ப்பாணம் நகரசங்கத் தலைவர் ஸ்ரீ. பொன்னம்பலம், "போதுமப்பா போதும் இந்தப் புதுக்குளத்து வேளாண்மை" என்றுசொல்லிப் பதவியினின்றும் விலகப் போவதாகக் கடந்தவாரம் பட்டணம் முழுவதும் ஒரே கதை. வரியிறுப்போர் சங்கம், தலைவர் மீது நம்பிக்கையற்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியபடியால் ஸ்ரீ. பொன்னம்பலம் விலகுகின்றார் எனவும் பேசிக்கொண்டார்கள். "ஐயா சங்கதி உண்மைதானா?" என்று அவரைக் கேட்டால், "யார் சொன்னது! முழுவதுஞ் சுத்த அபத்தம். எனது நிர்வாகம் திருப்தியளித்திருப்பதாக அரசாங்கம் உறுதிசெய்கின்றது. வரியிறுப்போரிற் பெரும்பான்மையோர் என்மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர். போங் காணும் போம்" என்று அட்டகாசம் போடுகின்றார். மந்திரி மகாதேவாவும் அவருடைய அதிதி ஸ்ரீ. மொல்லமுரே என்பவரும் யாழ்ப்பாணத்திலே தங்கிய நாட்களில் மின்சார விசிறி உபயோகிக்க விரும்பிய போது 'அதெல்லாம் இந்தக் கஷ்டகாலத்தில் முடியாது;' என்று கூறிய தலைவரின் உறுதியையும் ஊக்கத்தையும் யார்தான் கண்ணியப்படுத்த மாட்டார்கள்? ஐயா! தலைவரே! தளராது முயற்சித்துப் பொதுஜன வாழ்க்கையையும் புனிதமாக்குங்கள்!

### வாலில்லாத பிராணிகள்

றிக்ஷோமீது ஏறிச் செல்வது மிருகத்தனம் என்ற கொள்கை வலுப்பெறுகின்றது. மனிதனை மனிதன் இழுத்துச் செல்லும் இழிவான செயலை நாகரீக உலகம் கண்டிக்கத் தொடங்கியிருப்பதும் அணுக்குண்டு யுகத்தின் அற்புதம் என்றே கூறவேண்டும். சீனத்திலேதான் முதன்முதல் றிக்ஷோ 'சீர்திருத்தம்' ஆரம்பித்தது. [illegible] சௌகரியத்துக்காக மனிதர்களை மிருகங்களாக்கினர். மெல்ல இந்த றிக்ஷோக்கள் ஜப்பானுக்குள் நுழைந்து இந்தியாவிலும் ஏனைய கீழைத் தேசங்களிலும் ஆட்சி செலுத்துகின்றன. போதாக் குறைக்கு ஜப்பான் அழகான றிக்ஷோக்களைச் செய்து கீழைத் தேசங்களில் நல்ல விலைக்கு விற்றது. அநேக மக்கள் இதையே ஜீவனமாக்கொண்டு றிக்ஷோ இழுத்து வயிற்றுப்பாட்டைச் சமாளிக்கின்றனர். றிக்ஷோக்காரனின் சராசரி வாழ்க்கைக் காலம் 43 வருடங்கள் என்று தெரிகின்றது. அநேகமாக இருதய நோய்க்கு இவர்கள் இரையாகிக்கொண்டும் வருகின்றனர். ஒன்றக்கு இரண்டு மிலிட்டரி மல்லர்களை றிக்ஷோவில் ஏற்றிக்கொண்டு பஞ்சத்தில் அடிபட்ட மனித ஜெந்துக்கள் குடல் தெறிக்க ஓடுவதையும் நகருவதையுங் கொழும்பு வீதிகளில் தினமுங் காணலாம். மனித சமூகமும் இதைச் சகித்துக்கொண்டுதானேயிருக்கின்றது! வண்டியிழுக்கும் வாலில்லாத பிராணிகளும் எங்கள் சகோதரர்கள்தானே.

### மீனுக்கு மதிப்பு

ஓடும்ரயிலை நிற்பாட்டுவதற்குப் பெரியமனிதராகப் பிறக்கவேண்டியதில்லை. மீன்காரிகள் இந்த வேலையை இலேசாகச் செய்துவிடுகின்றனர். யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானத்தை விட்டு வண்டிகள் வேகமாகக் கிளம்புவதுண்டு. ஆனால் மீன்காரப் பெண்கள் சுமையுடன் ஓடோடியும் வந்து "ஐயா! எப்பென், ஙிப்பாட்டும்" என்று இரைந்தவுடன் ரயில் நின்றுவிடுகின்றது. இத்தனைக்கும் மீனாகப் பிறக்கவேண்டுமா அல்லது மீன்காரப் பெண்களாக உலகத்திலே தோன்ற வேண்டுமா வென்பது தெரியவில்லை.

### தங்கம் பறக்கின்றது

இந்தியாத் தங்கமெல்லாம் ரயிலிலுங் கப்பலிலுமே பிரயாணஞ் செய்வதாக அறிகின்றோம். ஆனால் இத் தங்கப்பவுண்கள் இப்போது சிறகு முளைத்துப் பறக்கவுந் தொடங்கிவிட்டன. இந்தியாவிலிருந்து ஆகாயத்திற் பறந்துவந்து இலங்கையிற் குதிப்பவர்கள் தங்கமான மனிதர்களென்று நம்பியிருந்தோம். இந்த நம்பிக்கையும் இப்போது பறந்து விட்டதே.

### வெள்ளி விழா

தங்கத்தைப்பற்றிப் பேசும்போது யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி வெள்ளிவிழா நினைவுக்குவருகின்றது. இந்திரலோகம் போலக் கல்லூரி முன்றில் இவ்வாரத்திலே நிகழும் இரத்தினக் குவியல்களுக்கும் இன்னிசை விருந்துக்கும் அற்புதமான காட்சிகளுக்கும் 'காணிவல்' காலத்திற் பஞ்சமேற்படமாட்டாது. இந்த ஆனந்த வைபவத்திற் பங்குபற்றி இன்புறுவதற்கு இப்போதே தயாராகுங்கள்.

## 'பழமையும் புதுமையும்' ஒரு திருத்தம்

கடந்தமாதம் 28-ந் திகதி வெளிவந்த ஈழகேசரி இதழிலுள்ள 'பழமையும் புதுமையும்' என்ற கட்டுரையில் பாரதியாரை வ.ரா. வேதாந்தச் சிமிழிலிட்டார் என்று காணப்படுகின்றது. இது தவறுதலாக நேர்ந்த பிழை. வ.ரா. அவர்கள் மகாகவி பாரதியார் என்ற தமது நூலிற் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்: "பாரதியார் ஆஷாடபூதி வேதாந்தியே அல்ல. அவர் மகாகவி. அவர் இணையற்ற கவிஞன். உலகத்தை ஆண்டு அனுபவிக்கவந்த உத்தமன். எனவே. சிலர் செப்பிடுவித்தை செய்து, பாரதியாரை வேதாந்தச் சிமிழிலே போட்டு அடைக்க வேண்டாம்."

## புதிய காங்கிரஸ் தலைவர்

### பண்டித ஜவஹர்லால்நேரு

இந்தியக் காங்கிரஸின் அடுத்த வருடாந்த மகாநாட்டுக்குத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப் பட்டுள்ளார். நேருஜி 1936-ல் லட்சுமணபுரிமகாநாட்டிலும் 1937-ல் பெய்ஸ்பூர் மகாநாட்டிலும் தொடர்ந்து இரு வருடங்கள் காங்கிரஸ் தலைவராகவிருந்தவர்.

## 236-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

பின்வரும் விஷயங்களைத் தகுதிப்பத்திரம் (லைசன்ஸ்) உடைய வியாபாரிகள் கவனிப்பார்களாக

(a) தவறிப்போன கூப்பன்கள்:- வியாபாரிகள் தங்கள் கூப்பன்கள் தவறிப்போனதாக முறைப்பாடுகள் அடிக்கடி வருகின்றன. தங்கள் கூப்பன்களைக் கண்காணிக்க முடியாத வியாபாரிகள் சரக்குப் போதிய அளவு கிடைக்கும் வரையும் கச்சவடத் தொழிலிலிருந்து நீங்கவேண்டியதுதான் சிறந்தது. தவிர்க்கமுடியாத சிறந்த காரணங்கள் இருந்தாற்றான் இழந்த கூப்பன்கள் பொருட்டு மன்னிப்புண்டு. எவ்வகைத்தான காரணமாயினும் எப்பொழுதாயினும் இழந்துபோன கூப்பன்களுக்கு ஈடாகக் கூப்பன்கள் கொடுக்கப்படமாட்டா.

(b) அதிகாரமின்றிப் புடவை வைத்திருத்தல்:

கடைக்கு அருகாமையிலுள்ள வியாபாரியின் பண்டக அறையில் ஓரளவு தொகையான புடவைகள் இருக்கக் காணப்படுகின்றன. வியாபாரிகள் அத் தரவாயில் எழுத்து மூலமாகத் தனது வாய்ப்பிறப்பைக் கொடுப்பதில்லை. நீதிமன்றத்தில் அவை விற்பனைக்கல்லவென்றும் தங்கள் சேவையிலுள்ளவர்கட்குக் கொடுக்க வைத்திருக்கிறதென்றும் அல்லது தங்கள் சேவையிலுள்ளவர்கள் விலைக்குப் பெற்றுப் பாதுகாப்புக்காக அவ்விடத்தில் வைத்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இவ்வகையான தருணத்தில் அதிகாரம் இன்றிப் புடவை வைத்திருப்பது ஏற்படுகின்றது.

2. பின்வரும் விஷயங்களுடன் சம்பந்தம் உள்ள வியாபாரிகள் போதிய அளவு சரக்கு வரத்து இல்லாத சொற்ப காலத்துக்கு வியாபாரம் செய்யத் தகுதி அற்றவர்களாக என்னுற் கொள்ளப்படும்.

(a) ஏதாவது கண்டுபிடிக்கப்படும்பொழுது காரணங்களை விளக்கி எழுத்துமூலம் கொடுக்கப் பின் நிற்கும் வியாபாரிகள் வியாபாரியில்லாத விடத்துக் கடை முதலாளி அல்லது பிரதான உதவியாள் தங்கள் சொந்தக் கையெழுத்தால் எழுத்துமூலம் கொடுக்கவேண்டும்.

(b) எவ்விடத்திலாவது தனது குடும்பத் தேவைக்கு மேலதிகமான உபயோகிக்கப்படாத புடவைகளை வைத்திருக்கும் வியாபாரிகள்.

(c) தனது குடும்பத்தினது அல்லது புடவை விற்றபொழுது எடுத்துக்கொண்ட கூப்பன்கள் அல்லாத கூப்பன்களைத் தங்கள் வசம் வைத்திருக்கும் வியாபாரிகள்.

ஈ. ரூெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 2-5-46 [2753]

## 237-வது புடவைக் கட்டுப்பாட் டறிவித்தல் (புடவைப் புஸ்தகங்கள் பங்கிடு செய்தல்)

1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் புடவைப் புஸ்தகங்கள் பங்கிடு செய்தபோது பற்பல காரணங்களால் புஸ்தகங்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களின் விண்ணப்பங்கள் எமது அலுவலகத்துக்கும் கச்சேரிகட்கும் இன்னும் அனுப்பப்படுகின்றன. புடவைப் புஸ்தகங்கள் பெற்றுக்கொள்ளப் பொதுசனங்கட்குப் போதிய காலம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே புடவைப் புஸ்தகம் பெறுதற்குப் புதிய விண்ணப்பங்கள் 1946-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதிக்குப் பின் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஈ. ரூெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 2-5-1946. [2754]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சம்பளத் திட்டம்

## சுவபாஷா ஆசிரியர்களின் நிலை

S. R. கந்தசாமி

இலங்கையிற் கடந்த பதினைந்து ஆண்டுகளாக அரசாங்க நிர்வாகம் இலங்கையர்களைக் கொண்ட மந்திரி சபையின் பொறுப்பில் இருந்து வருகிறது. இவர்கள் பதினைந்து வருட ஈற்றில் தாய்மொழி மூலம் உயர்தரக்கல்வி கற்பித்தலையும் அரசாங்கத் தொழில்கள் நடத்துவதையும் ஆலோசனைக்குக் கொண்டு வந்தனர். இவ்வாலோசனைகளால் ஏற்பட்ட கருத்தற்ற தீர்மானங்கள் கல்வி உலகில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. தாய்மொழியை விருத்தியாக்க வேண்டுமென்பது அரசியலில் முதன்மை வகிக்கும் பலாது வாய்ப்பேச்சு. அவர்கள் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாகப் பல அறிவாளிகளின் கூற்றுக்களை மேற்கோளாகக் காட்டுகின்றனர். வித்தியாபகுதியாரும் தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதை உவந்து ஏற்கிறார்கள். ஆனால் தாய்மொழியைக் கற்பிப்பவர்களின் நலன்கள் பாதுகாக்கப் படாவிடத்துத் தாய்மொழிக் கல்வி எவ்வாறு விருத்தியடைய முடியும். தாய்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நேர்மைக்கும், ஒழுங்குக்கும், கட்டுப்பாட்டிற்கும், அமைதிக்கும் நிலைக்களமானவர்களென்பது மிகையானதல்ல. ஆனமையினாற்றான் 'தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்றபடி சம்பள விசாரணைச் சபையார் சுவபாஷா ஆசிரியர்களின் சம்பள விஷயத்தில் அலட்சியமாக நடந்தார்கள், ஏணியும் தோணியும் போன்று தம்மையடைந்தாரைத் தாங்கி உயர்வடைவிக்கும் நிலைமையிற்றான் சுவபாஷா ஆசிரியர்களிருந்து வருகிறார்கள்.

சுகாதார வாரங்களை நடத்தி வைத்திய சுகாதாரப் பகுதியினர் வாழ்வடையக் கைகொடுத்து நிற்பதும் ஐக்கிய ஸ்தாபனங்களை ......... பண்டகசாலைகளை...... நடத்தி ஐக்கிய சங்கப் பகுதியினரைத்தாங்கி நிற்பதும், இன்னும் யுத்தகாலச் சேவைகளாக வரும் 'A. R. P.' சேவை, குடிசன மதிப்பெடுப்புப் போன்ற கருமங்களைப் பணிவுடன் செய்து கையற்று வாழ்வதும்தான் பொதுவாழ்வில் சுவபாஷா ஆசிரியர்களுக்கு கிடைத்த அந்தஸ்தா? கேவலம்! நாட்டிலுள்ள வேறு எந்த உத்தியோகஸ்தராவது இந்நிலையில் இருக்கின்றார்களா?

பொதுவாழ்வில் ஈடுபடும் சுவபாஷா ஆசிரியர்களுக்குச் சம்பள விசாரணைச்சபையார் விதித்த திட்டம் நீதியானதா? வங்கித் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் முதலியவர்களைப்போல ஆசிரியர்களும் வேலைநிறுத்தம் செய்யவேண்டுமென்பதை மறைமுகமாகத் தூண்டுவதுதானு சம்பள விசாரணைச் சபையாரின் அந்தரங்கமான நோக்கம். அவர்கள் நோக்கம் அத்தகையதேல் அது இரங்கவும் வருந்தவும் தக்கதுதான். உணவு உடை முதலியவற்றைப் பங்கு செய்வதில் எல்லார்க்கும் ஒரே நீதியென்று பறை சாற்றும் அரசினர் சம்பள நிர்ணயத்தில் மட்டும் அவ்வொழுங்கைப் பின்பற்றுததேன்? சம்பள விசாரணைச்சபையாரின் இடைக்கால அறிக்கையிற் கூறப்பட்டுள்ள இரு விஷயங்களை முதலில் நாம் கவனிக்க வேண்டும். அதாவது வாழ்க்கைச் செலவுகள் யுத்தத்திற்கு முன்னிருந்த நிலைமையிலும் $33\frac{1}{3}$ வீதத்திற்கு மேலேயுள்ள புள்ளி நிலைக்குக் குறைய இறங்கமாட்டாதென்பதொன்று. மற்றொன்று இலங்கையில் ஆகக் கூடிய சம்பள வீதத்திற்கும் ஆகக்குறைந்த சம்பள வீதத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம் மற்ற நாடுகளில் உள்ள வித்தியாசத்திற்குக் கூடியது. ஆகையால் குறைந்த சம்பள விகிதங்களை யுத்தத்திற்கு நேரடுத்து முன்னிருந்த நிலையிலும் குறைந்த பட்சம் மூன்றிலொரு பங்காலும் உயர்ந்த சம்பள வீதங்களை (ஏற்ற வேண்டிய இடத்தில்) குறைந்த பின்னங்களாலும் கொடுக்கவேண்டும் ......" என்பது.

இம்முடிபுகளை ஆதாரமாகக் கொண்டு சம்பள விசாரணைச் சபையாரின் முடிபுகளைச் சிறிது ஆராய்வாம். முன்னிருந்த சம்பளத் திட்டத்தின்படி நகர் காவற் சேவகத்தில் இருப்பவர்கட்குப் பொலிஸ்பகுதி ஆரம்பச் சம்பளம் ரூபா 28/ இப்பொழுது சம்பளச் சபையாரின் தீர்மானத்தின்படி தொடக்கச் சம்பளம் ரூபா 50/ இது முன்னிருந்த சம்பளத்திட்டத்திலும் பார்க்க $78\frac{4}{7}\%$ அதிகரித்திருக்கிறது. சுவபாஷா ஆசிரியர்களுக்கு முன்பிருந்த தொடக்கச்சம்பளம் ரூபா 43/ இப்பொழுது சம்பளச்சபையின் தீர்மானப்படி தொடக்கச் சம்பளமும் ரூபா 63/50. இது முன்பிருந்ததிலும் பார்க்க $52\frac{14}{43}$ வீதம் அதிகரித்திருக்கிறது. ஏழாம் வகுப்புச் சித்தியெய்திய பின் ஆறுமாசப் பயிற்சி பெறும் நகர் காவல் உத்தியோகஸ்தர் நிலையும், சிரேஷ்ட பாடசாலைத் தாராதரப்பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில்சித்தியெய்தி ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்திற்காகப் பகீரதப் பிரயத்தனஞ்செய்து இரண்டு அல்லது மூன்று வருடப் பயிற்சியை முடித்ததின்பின் இரவும் பகலும் இடந்தேடியலைந்து உத்தியோகம் பெறும் சுவபாஷா ஆசிரியர்களின் நிலைமையும் ஒரேதரத்ததா? அன்றி நகர் காவற் சேவகர்களுக்கு உத்தியோக உடையும், வசிப்பிடமும் அரசாங்கத்தாரால் உதவப்படுகின்றன. ஆகையால் சுவபாஷா ஆசிரியர்களை இவ்விதமான இழிந்த நிலைமையில் வைத்திருப்பதுதான் ஜனநாயக அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையா? பொருளாதார சமத்துவமின்றி ஜனநாயக சுதந்திரம் கைகூட லரிது. ஆதலால் ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்ட அரசியலில் இருவேறுவகையான பொருளாதாரக்கொள்கைகள் இருப்பது வருந்தத்தக்கது. அரசாங்க லிகிதரில் மூன்றும் வகுப்பினருக்கு முன்பிருந்த சம்பளத்திட்டம் ரூபா $\frac{40-100}{30}$. 1940 ல் திருத்தப்பட்ட திட்டத்தின்படி ஆரம்பச்சம்பளம் ரூபா 50/. விசாரணைச்சபையார் பொது வகுப்பாருக்கு வகுத்த சம்பளம் ரூபா $\frac{70-202}{72}$ என்பது. மூன்றும் வகுப்பு லிகிதர் ஆரம்பச் சம்பளம் 1940-ம் ஆண்டிற்கு முன்பிருந்ததிலும் பார்க்க 75 வீதம் அதிகரித்திருக்கின்றது. ஆங்கிலத்தில் சீனியர், மற்றிக்குலேஷன், எஸ். எஸ். சி. பரீட்சைகளில் ஒன்றில் சித்தியெய்திய ஒருவர் அரசாங்க லிகிதராக விருந்து பெறும் சம்பளத்தை அவ்வித தகுதி வாய்ந்த ஒருவர் இரண்டு வருட ஆசிரிய பயிற்சியின் பின்னும் எக்காலத்திலாயினும் பெறமுடியாமலிருப்பது அநீதியானதாகும். அரசாங்க லிகிதர் சேவையிற் சேர்வோர் உத்தியோகத்தில் படி முறையாக வளர்ந்து செல்வதற்குப் பல வாயில்களுண்டு. ஆனல் சுவபாஷா ஆசிரியர்களோ வாயிலற்ற கோட்டையிற் புகுத்தப்பட்ட கைதியின் நிலைமையில் இருக்கிறார்கள். அவ்வித நிலைமையில் இருக்கும் ஆசிரியர்களின் கொள்கைகளைப், பூர்த்தியாக்குவது நீதிவாய்ந்த அரசாங்கத்திற்கும் பொறுப்பு[illegible] யுள்ள தலைவர்களுக்கும் [illegible] யாகும்.

நாட் சம்பளம் பெறும் கீழ்த்தர மேற்பார்வையாளரின் கூடிய சம்பளம் ரூபா 64ஆக விருக்கையில் நாட்டுமக்களின் கலைப்பண்பின் விருத்திக்கு மூலாதாரமாயுள்ள சுவபாஷா ஆசிரியர்களின் சம்பளம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று சம்பள விசாரணைச் சபையார் சிந்தியாதது சுவபாஷா ஆசிரியர்களின் துர் அதிட்டமா? அல்லது சம்பள விசாரணைச் சபையாரின் நீதியற்ற கொள்கையா? இவற்றை அறிஞர்கள் கவனிப்பார்களாக.

சுவபாஷா ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுப்பதற்கு நாட்டின் கல்விச் செலவு அதிகரித்து வருவது பெருந்தடையாக விருக்கிறதென்று காரணங் கூறப்படுகிறது. 1945-ம் ஆண்டில் இலங்கை கல்விக்காகச் செய்த செலவு 342 இலட்சம் ரூபா. ஆனல் 1945-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 1-ம் தேதி முதல் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்குவந்தமையால் கல்விச் செலவு 800 இலட்சம் ரூபாவாக அதிகரித்து விடுமெனக் கணக்கிடுகிறார்கள். உண்மையில் இலவசக்கல்வியில் சுவபாஷா ஆசிரியர்கள் மாத்திரம் பலனடைந்தவர்களல்ல. இலங்கையில் உள்ள உத்தியோகஸ்தர் ஒவ்வொருவருக்கும் இத்திட்டத்தால் ஆதாயம் கிடைக்கிறது. ஏனெனில் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகக் கொடுக்கப்படும் சம்பளப்பணம் இத்திட்டத்தினுல் அவர்கட்கு ஆதாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் இலவசக்கல்வித் திட்டத்தினுலேற்பட்ட பெரும் செலவை இலங்கையரசாங்கத்திற் கேற்பட்ட பொதுச் செலவாகக் கருதுவதேயன்றி சுவபாஷா ஆசிரியர்களுக்குக்குறைந்த சமபளத்தைக் கொடுப்பதற்கு ஏதுவான திட்டமாய்க் கொள்வது ஆதாரமற்ற கொள்கையாகும்.

இலங்கையின் தாய் மொழிகளாகவுள்ள சிங்களத்தையும் தமிழையும் அரசியல் மொழியாக்க முயற்சி செய்யும் அரசாங்க சபையினர் அம்மொழிகளின் விருத்திக்குத் துணைபுரியும் ஆசிரியர்களைப் புறக்கணிப்பது மூலவேரைவெட்டி மரத்தை வளர்ப்பது போன்ற செயலாகும். அரசாங்கசபைத் தெரிவு காலங்களில் ஆசிரியர்களையண்டி அவர்களின் ஆதரவைப் பெற்று அரசாங்கசபை அங்கத்துவம் வகிப்பவர்கள் சுவபாஷா ஆசிரியர்களின் குறைகளைப்போக்க முயல்வார்களாக.

சுவபாஷா ஆசிரியர்கள் ஆங்கில ஆசிரியர்கள் என்ற வித்தியாசம் புதிய திட்டத்தில் இல்லை என்று, பலர் கூறுகிறார்கள். ஆனுற் பேரளவில் இவ்வேறுபாடு இல்லாதிருத்தல் எவ்வித பயனும் தரமாட்டாது. சம்பளத் திட்டத்திலும் அவ்வேறுபாடில்லாதிருத்தல் விரும்பத்தக்கதே. ஆங்கிலத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் புதிய திட்டத்தின்படி ரூபா 140–350 பெறக்கூடியவர் ஆகின்றார். ஆனல் ஆங்கிலத்தில் சீனியர் மற்றிக்குலேஷன் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியெய்திய ஒருவர் சுவபாஷா ஆசிரியராகப் பயிற்றப்பட்டால் பெறும் சம்பளம் இதனிலும் எத்தனை மடங்கு குறைவானது. பயிற்சிப் பாஷை வித்தியாசத்திற்காக மட்டும் இவ்வித பெரும் வித்தியாசம் பாராட்டுவது மறைமுகமான தாய் மொழிக் கொலையேயன்றி, வேறென்ன?

ஆங்கிலத்திற் பட்டதாரிகளாகவுள்ளவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருந்தால் புதிய திட்டத்தின்படி ரூபா 200–405 பெற இடமுண்டு. விசேட நியமனங்களில் ரூபா 375 – 540 பெறவுமிடமுண்டு. ஆனல் கீழ்த்திசைமொழிகளில் பட்டதாரிகளாகவுள்ளோர் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருப்பின் எவ்வித விசேட சம்பளத் திட்டத்திற்கும் இடமற்றவர்களாகக் கருதப்பட்டிருக்கிறார்கள். இது கீழ்த்திசை மொழிகளுக்கு[illegible] விருத்தியை நாடும் அரசாங்கம் செய்யும் பெருந் தீமையாகும். தாய் நாடாகிய இந்தியாவிற் கீழ்த்திசை மொழிகளிற் பட்டம் பெற்றவர்கள் நீதியான சம்பளத்தைப் பெறுகிறார்கள். ஆனல் இலங்கையிலோ அவ்வித பட்டதாரிகள் ஆசிரியர்களாக அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் அத்துடன் பயிற்றப்பட்டவர்களாக இருப்பினும் எவ்வித விசேட சலுகைகளும் கொடுக்கப்படுவதுமில்லை.

சம்பள விசாரணைச் சபையார் —தாய்மொழியின் விருத்தியை மேலாகக் கருதும் அரசாங்கசபை ஒன்றினுல் நியமிக்கப்பட்டவர்களாயிருந்தும் சுவபாஷா ஆசிரியர்களுக்கு மிகக் குறைவான சம்பளத்திட்டம் வகுத்ததற்குச் சுவபாஷா ஆசிரியர்களின் முயற்சிக் குறைவும் ஒருவகையில் காரணமானதே. இனிமேலேனும் சுயபாஷா ஆசிரியர்களனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் தெரிவுத் தொகுதிப் பிரதிநிதிகளின் மூலம் தங்கள் நலன்களைப் பாதுகாப்பார்களாக. அது கைகூடாவிடத்து, தொழிலாளர் இயக்கங்களில் சேர்ந்து வேலைநிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்படுமா?

# நமது வாசிகசாலை

## கம்பர் கழக வெளியீடு

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

**கம்பன் கவியமுதம்**— சென்னைக் கம்பர் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அலயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. பக்கம்: 120. விலை: மலிவுப்பதிப்பு ரூ 2-0-0. உயரிய பதிப்பு ரூ. 3-0-0.

இந்நூல் கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமானை நினைவுறுத்தற் பொருட்டு சென்னைக் கம்பர் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. கம்பர், கம்பர் கடவுட்கொள்கை, கம்பராமாயணக் காவிய அமைப்பு, கம்பன் கனவு முதலிய பதினேழு விடயங்களும் இந்நூலைச் சிறப்பிக்கின்றன. இவை கம்பராமாயணக் காவியம் முழுவதையும் தெளிவுற ஆய்ந்து கற்ற பேராசிரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. காவியச் சிறப்பும் கம்பரின் கவித்துவப் பெருமையும் சிறந்த ஆராய்வுடன் சுருக்கமாகச் சிறந்த நடையில் விளக்கி இருத்தல் வாசிப்போர்க்குப் புலனுகும். இதனை 'இராமாயண விமர்சனம்' எனினும் மிகையாகாது.

வைணவ காப்பியத்தைச் செய்த கம்பரை நினைவூட்டுதலுடன் சைவ காப்பியமாகிய பெரிய புராணத்தைச் செய்துதவிய சேக்கிழார் சுவாமிகளையும் நினைவூட்டுவார்போல வித்துவான் மா. இராசமாணிக்கம்பிள்ளை அவர்கள் இரு பெரும் புலவரையும் உடன் வைத்து ஆராய்கின்றார். கம்பர் சேக்கிழாருக்கு 25, 30 வருடங்கள் பிற்பட்டவர் என்பது இவர்முடிபு. கம்பர் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தவர் (கி. பி. 1178—1218) என்பதும், சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர் (கி. பி. 1133—1150) என்பதும், ஆராய்ச்சியாளர் முடிபாதலின் இவர் குறிப்பிட்டதும் பொருத்தமானதே. கால நிலைக்கும், தேசப்போக்குக்கும், மக்களின் நாகரீகத்துக்கும், தேவைகளுக்கும் ஏற்பவே நூல் செய்யப்படவேண்டும். ஆதலின் அங்ஙனம் இயற்றப்பட்ட ஒரு நூலைப் பின்னோர் காலத்திற் பொய்யென்றும் புழுகென்றுங் கூறுதல் தப்பு. "கதையின் மெய்த்தன்மை எந்த அளவினது என்பதைக் கம்பர் நன்கு அறிந்தவரே ஆவர். 'அஃது உண்மையில் நடந்த கதைதான்' என்று அவர் யாண்டுங் கூறவில்லை. அதனுற்றான் அவர் தங்கால மக்கள் மனப்போக்கை மதித்து, அக்காலத்தில் வழங்கிய கதைக்குறிப்புக்களைக்கொண்டார். தமிழ் நாட்டு மக்கட்கு நூல் செய்ய வேண்டிய நிலையில் இருந்த அவர் தமிழ் இலக்கண முறைக்கேற்பப் பலபுதிய செய்திகளைச்சேர்த்தார். தமிழ் நாகரிக நிலைக்கேற்பச் சில மாறுதல்களைச் செய்தார்." எனத் திரு. பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதும் இதுபற்றியே. பெரிய புராணத்திலுள்ள சில தொடர்களும், பொருளும் கம்பராமாயணத்திலும்வருதலை இவர் பலஎடுத்துக் காட்டுகளாற்புலப்படுத்துகின்றார்.

வால்மீகத்தின் வழி நூலாக இது யாக்கப்பட்டதாயினும் அது வழி நூலெனப்படாதவாறு தமிழ் நெறிப்படயாத்தனர் என்பது இதன் கட்டுரைகளில் இருந்து புலனும். "மிதிலையில் இராமனைச் சந்திக்கிற காட்சி வால்மீகத்தில் இல்லை. கம்பர் தருகிறது ஆரியக் காதலன்று; தமிழர் முறையிற்றான் அது சமைந்து கிடக்கது" எனதிரு. ரா. ஸ்ரீ. தேசிகன் எம்.ஏ. அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கம்பன் கனவை எழுதியவர் சிறந்த ஒரு முறையில் கம்பரின் கவித்துவப் பெருமையை விளக்கியுள்ளார். அவர் விளக்கும்முறையிலும் ஒரு நயம் அமைந்துளது. ரொம்ப 'டவாலி' வக்கீல் என்ற சொற்களையும் ஓர் நயங் கருதியே பிரயோகித்தார் போலும்.

இங்ஙனம் இந்நூல் அமைந்ததாயினும் மலிவுப் பதிப்புக்கு உபயோகித்திருக்கும் காகிதம் உயர்ந்ததன்று. சிற் சில தகாத சொற் பிரயோகங்களும், அச்சுப் பிழைகளும் நீக்கப்படல்வேண்டும்.

—பண்டிதர் நா. கந்தையா

**முத்தமிழ் மலர்–1** பதிப்பாசிரியர்: மே.சக்கரவர்த்தி நயினார், பிரசுரம்: முத்தமிழ் நிலையம் 75, வரதா முத்தியப்பன் தெரு ஜி. டி- சென்னை; விலை: தனிப் பிரதி அணு 8.

இவ்விலக்கிய மலர் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது. 'முத்தமிழ் வாழ்வு' 'வளரும் தமிழ்' என்ற கட்டுரைகள் படித்து இன்புறத்தக்கன. சிறு கதைகளுங் கவிதைகளும் உண்டு. இது மாதம் ஒரு புத்தகம் என்ற வரிசையைச் சேர்ந்தது. அழகான வெளியீடு.

# ஸ்ரீ தேசாய் மறைவு

நேதாஜி வீரர்களுக்கு விடுதலை தேடிய கிழச்சிங்கம் புலாபாய் தேசாய் இம்மாதம் 6-ந்உ அதிகாலையிற் காலமானுர். இவர் கடந்த 4 மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார், ஒப்பற்ற இத்தலைவரின் பிரேத ஊர்வலம் அதேதினம் பம்பாயிலுள்ள காங்கிரஸ் மாளிகையிலிருந்து கிளம்பி நகரின் பல முக்கிய வீதிவழியாகச் சென்று சோனுப்பூர் மயானத்தையடைந்தது.

* * *

ஸ்ரீ தேசாய் 1877-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ந் திகதி பிறந்தார். பிரதம நியாயவாதியாயிருந்த தேசாய் அவர்களை காந்திஜீயின் அரசியல் வேகம் தேசியப் போராட்டத்துக்கு இழுத்தது. 1932-ல் ஸ்ரீ புலபாய் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை அடைந்தார். ரூ. 10,000 அபராதமுங் கொடுத்தார். தேசாயின் தியாக வாழ்க்கை பிரசித்தம் வாய்ந்தது. அவருடைய சேவைகளுக்கு இந்தியா பெரிதுங் கடமைப்பட்டிருக்கின்றது. புகழைத்தேடிப் புகழிலேயே மறைந்த தேசாயின் ஆத்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாயா அன்பர்களுக்கு--X • "சுயா"

# அம்மை வார்த்தது

"ஐயா! என் கடமையின் நிமித்தம் திங்கட்கிழமை வேறிடத்துக்குப்போய்; மறுபடிவெள்ளிக்கிழமை இவ்வூர்க்குத் திரும்பிவர அநுமதி கொடுக்க வேண்டுமையா".

"முடியாது"

"அப்புறம் என்ன ஐயா செய்ய வேண்டும்!"

"செய்வதென்ன! இந்த இடத்தை விட்டுப் போய்விட்டால் அப்புறம் இரண்டு வாரத்துக்கு இங்கே தலைகாட்டவே கூடாது".

"ஐயா! இந்த ஆபத்துக் காலத்தில் என் பெண்டுபிள்ளைகளை இங்கே விட்டுவிட்டு அங்கே எப்படி மனம் நிம்மதியாய் இருக்கமுடியும்? கொஞ்சம் தயவு வையுங்கள் ஐயா. நீங்கள் என்றால் இருப்பீர்களா ஐயா

"ஓய் அதெல்லாம் முடியாது. (அநுமதி யெழுதும் பாரத்தை எடுத்துவைத்துக்கொண்டு) இஷ்டமா சொல்லும்அநுமதியெழுத!

"என்ன ஐயா சொல்லுகிறீர்கள்! (சிலரின் பெயரைச் சொல்லி) இவர்களை யெல்லாம் தினமும் வெளியில் போய்வர அநுமதித்திருக்கின்றீர்களே உங்களுடன் வேலைபார்க்கும் டாக்டர் ஐயா கூடத் தினமும் பல மைல்களுக்கு அப்பாலுள்ள தன் வீட்டுக்குப் போய்வருகின்ருரே ஐயா! இவர்களோடு இந்நோய் ஒட்டிக்கொண்டு போய் விட்டதா டாக்டர்களென்ருல் இந்நோய்க்குப்பயமா ஐயா!

(அவர் அதிக கோபத்தோடு) "அதை யெல்லாம் கேட்க, நீ யார் ஓய்! உம்மோடு பேச எனக்கு நேரமில்லை; போ ஓய் வெளியே!" அப்புறம் நடந்த அசம்பாவிதமான சம்பாஷணைகளையும் அதன் விளைவுகளையும் நான் இங்கே எழுத விரும்பவில்லை. இது நான் இருந்த கிராமத்தில் அம்மை நோய் பரவிய காலத்தில் எனக்கும், ஒரு வைத்திய அதிகாரிக்குமிடையில் வாஸ்தவமாகவே நடந்த சம்பாஷணை.

வைத்திய அதிகாரியோடு என் அலுவல் முடிந்தபின், ஒரு யௌவனப் பெண், மணமானவள், வறுமையின் சாயல் அவ்வளவும் அவள் உடைநடைகளிற் தெரிய, துயரந் தேங்கிய முகத்தோடு, அவ்வைத்திய அதிகாரியின்முன் போய், "ஐயா! என் குழந்தை கிரந்தித் தொய்வால் வருந்துகின்றது. நோய் கடுமை, (ஒரு இடத்தைச் சொல்லி) அங்கு போய்க் கிரந்தி யெண்ணெய் வாங்கிவர வேண்டும், அநுமதி தரவேண்டும்;" என்று அழாக் குறையாய் இரந்தாள்.

"கிரந்தி யெண்ணெய் ஆவது மண்ணுங்கட்டியாவது போகவே கூடாது" என்று விட்டார் அவ்வைத்திய அதிகாரி. இவ்வார்த்தையைக் கேட்டதும் அப்பெண் திடுக்கிட்டுப்போனாள். குழந்தையை மரணத்தின் கையில் விட்டுவிட்டுத் தவிக்கும் மாதாவின் துயரத்தோடு அம்மாது திரும்பிய காட்சியைக் கண்ட போது, என் கண்களில் நீர் துளிர்த்தது. அப்போது "ஐயோ துர் அதிர்ஷ்டம் பிடித்த பெண்ணே! இப்படிப்பட்ட இடங்களுக்கு வரும்போது கொஞ்சம் நாசூக்கான உடையும், குலுக்குப் பிலுக்கு நடையும், கண்வெட்டும், நாணிக் கோணிப் பேசும் பேச்சும் வேண்டுமென்பதை நீ அறியாது போய்விட்டாயா" என்று அவளுக்குச் சொல்லலாம் போலிருந்தது எனக்கு.

ஒரு நாள் நான் இருந்த கிராமத்தில் நாலு பேர் மதிக்கும் ஒரு பெரிய மனுஷனோடு நாங்கள் ஐந்தாறு பெயர் ஏதோ பேசிக்கொண்டிருந்தோம். அதே சமயம் இரண்டு மூன்று மனிதர் இரைக்க இரைக்க ஓடிவந்து, அந்தப் பெரிய மனுஷனைப் பார்த்து "ஐயா! (ஒருவனின் பெயரைச் சொல்லி) அவன் துலாவிலிருந்து விழுந்து காலையும் இடுப்பையும் ஒடித்துக் கொண்டான், வைத்தியசாலையில் டாக்டர், "இதற்கு என்னால் வைத்தியம் பார்க்க முடியாது; எங்கேனும் நல்ல இடமாகப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்று சொல்லுகின்ருர்; ஆனால் அம்மை நோயைப் பராமரிக்கும் டாக்டரைக் கேட்டால் அவர் வெளியே போக அநுமதி தருகின்ருரில்லை. கொஞ்சம் தயவு பண்ணுங்கள்" என்று இரந்தார்கள். அந்தப் பெரிய மனுஷன் அவ்வைத்திய அதிகாரிக்கு ஒரு கடிதம் கொடுத்தார். அவர்கள் வெற்றியடைந்தவர்களைப் போல மகிழ்ச்சியோடு ஓடினர்கள். பின் சிறிது நேரத்தால் வாடிய முகத்தோடு ஓடிவந்து "ஐயா! அவர் அநுமதி தர மறுத்துவிட்டார்" என்ருர்கள். கேட்டுக்கொண்டிருந்த எங்கள் எல்லாருக்கும் கோபமாயிருந்தது. நான் அவர்களைப் பார்த்து "உயர்தர நீதிமன்றத்தில் ஒருவன் தன் சிவனைக் காப்பாற்றக் கொலைசெய்தானென்ருற் கூட நீதிபதிகள் அவனை மன்னிக்கின்றனர். நீங்களோ ஒரு ஜீவனைக் காப்பாற்றப் பார்க்கின்றீர்கள்; போங்கள்! போய் அவனை அநுமதியில்லாமலே கொண்டுபோங்கள்; கேஸ் வந்தால் நடத்துங்கள்". என்று சொன்னேன். பின் என்ன நடந்ததோ அந்நோயாளி யாதாயினனே நான் அறியேன்.

இவ்வளவையும் ஏன் எழுதினேனென்ருல்: இந் நோய் பரவிய காலத்தில், இதைப் பரிகரிப்பதற்காக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் நடந்துகொண்ட தான்தோன்றித்தனமான நடத்தையை நீங்கள் அறிய வேண்டுமென்பதற்காகவேதான். இன்னும் எத்தனையோ திருஷ்டாந்தங்களை யெல்லாம் நான் சொல்லக்கூடும். ஆனல் அவைகளுக்கு இங்கே இடமில்லை.

யாழ்ப்பாணத்தில் புற்றெலிகளை வேட்டையாடுபவர்களை நீங்கள் கண்டிருப்பீர்களல்லவா? வேட்டையாடுபவர்கள் வளையை ஒரு பக்கத்தால் அகழ்ந்து கொண்டுபோக, எலிகளோ இறக்கம் வைத்து வேறிடத்தால் பொத்துக்கொண்டு ஓடிவிடும். அதுபோல ஒரு இடத்தில் இந்நோய் ஆரம்பமாகி விட்டது என்று கேள்விப்பட்டதும், வைத்திய அதிகாரிகளும் மற்றவர்களும் அந்த இடத்துக்கு ஓடிப்போக, இந்நோயோ வேறிடத்தில் தலைகாட்டிவிடும். இப்படியே வைத்திய அதிகாரிகளுக்கு இந்நோய் கொடுத்த தொல்லை கொஞ்சநஞ்சமல்ல.

எல்லாம் அக்காளுக்குத்தான் சொந்தமா, எனக்குப் பங்கில்லையா என்று கேட்பது போலப் பெரியம்மையின் தங்கையாகிய சின்னம்மையும் (கொப்புளிப்பான்) கூடத் தொடங்கிவிட்டது அந்நகரில். பெரியம்மை வந்தவர்களின் தொகை குறைவென்றும், சின்னம்மை வந்தவர்கள் தொகைதான் கூட வென்றும் வைத்திய அதிகாரிகள், இரண்டுக்குமுள்ள பேதா பேதங்களையறியாது, சின்னம்மை வந்தவர்களையுங்கூட வாரிக்கொண்டு போய்விட்டார்களென்றும் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இந்த அம்மை வார்த்த காலத்தில், அதன் கோலாகலம் நடந்த இடங்களை அந்நாட்களிற் பார்க்க வேண்டுமே! வீதிகளிற் சனங்களைக் காண்பது குறைவு, ஒன்றிரண்டு பெயர் வீதியிற் போனலும், ஒருவரைக்கண்டவுடன் மற்றவர் தூரத்தூர விலகியே செல்வர். ஒருவரில் மற்றவருக்குச் சந்தேகம். திரும்பிய இடமெல்லாம் அம்மைப்பால் கட்டுபவர்களைத் தான் காணலாம். இவர்களின் தொந்தரவு சகிக்கமுடியாது. ஒவ்வொருவருக்கும் கையைக் காட்டவேண்டும். பால் கட்டும் தொகைக்கேற்ப இவர்களுக்கு ஏதும் கொம்மிஷனே என்னவோதெரியாது. ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் பால் கட்டும் தொகையினளவைக் கூட்டிக் கொள்ளவே பிரயாசைப்பட்டார்கள் போலிருந்தது. எனக்கெல்லாம் ஐந்து தடவை பால்கட்டிவிட்டார்கள். என்றாலும், அவர்கள் இதுதான் சமய சஞ்சீவி என்று நம்பிக்கை வைத்திருந்த பால் என்னளவில் அவர்களைக் கைவிட்டு விட்டது. இந்தப்பால் கட்டிகளிடம் ஒருவகையில் தப்பிவிட்டால் அப்புறம் காவற்காரர் தடல் புடல் சொல்லிமுடியாது. மூலைக்கு மூலை மார்தட்டிக்கொண்டு நின்ருர்கள் 'ரெம்பரெறிப் பொலிஸ்காரர்'. (இவர்களைப் பையன்கள் கூப்பன் பொலிஸ் என்று அழைப்பது வழக்கம். யுத்தகாலத்தில் இவர்களை அதிகமாக எடுத்தபடியால் பையன்கள் இப்பெயர்கொடுத்து அவர்களை அழைக்கத் தொடங்கிவிட்டார்கள்.) இந்த அம்மை நோய் காலத்தில் கூப்பன் பொலிஸ்காரர் தொகை போதாமற் போனபடியால் அங்கங்கே கிராமங்களில் சும்மா அரட்டை அடித்துக்கொண்டு திரிந்தவர்களையும் காவற்காரராக எடுத்திருந்தார்கள். பொலிஸ்காரரின் அட்டகாசம் ஒருபடி யென்ருல் இவர்கள் அதிகாரம் இம்மட்டு அம்மட்டல்ல. எல்லாருமாகச் சேர்ந்து ஏழை மக்களை ஒரு கலக்குக் கலக்கிவிட்டார்கள். அம்மை நோய் விளைத்த பீதி கொஞ்சம். ஆனல் இதைப் பரிகரிப்பதற்கு வந்தவர்களும், இந்தக் கூப்பன் பொலிஸ்காரரும் மற்றவர்களும் ஜனங்களுக்கு விளைத்த பீதியோ அதிகம். ஆளான ஆட்களிலேயே இவர்கள் கை வரிசை காட்டத் தொடங்கிவிட்டார்களென்ருற் சாமானிய ஜனங்களைச் சும்மா விட்டிருப்பார்களென்று எண்ணுகின்றீர்களா?

இந்த அம்மை நோய் பரவக் காரணமென்ன வென்று கேட்டீர்களோ? இந்தியாவுக்குப் போய் வருகின்ருர்கள் என்று நான் முன் எழுதியதை நீங்கள் படித்திருப்பீர்கள்தானே! அப்படிப் போய்வந்தவர்களிற் சிலர், இதை அங்கே கொள்முதல் செய்துகொண்டு, சுங்க வைத்திய அதிகாரிகளை ஏமாற்றிவிட்டு, இங்கே கொண்டுவந்து, கொஞ்சமும் ஆதாயம் வையாது, (ஏன் இலவசமாகவே யென்றும் சொல்லலாம்) இங்குள்ளவர்களுக்கு விற்பனை செய்துவிட்டார்கள். அப்புறம் பேசுவானேன். அனுமான் இலங்கைக்கு இட்ட தீ மாதிரி அது நாலா திசைகளிலும் பரவத் தொடங்கிவிட்டது. அன்று பரவியது இன்றும் தான் ஓயவில்லை, யுத்தத்தால் நீங்கள் கலங்கினீர்கள். இந்த அம்மை நோயால் நாங்கள் கலங்கினேம். யுத்தம் இதளவுக்கு எங்களைக் கலங்கவைத்துவிடவில்லை.

இந்த அம்மை நோய் வந்தவர்களை நோய் கண்டிருக்கும் நேரத்தில் நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? நான் அவர்களை நேருக்கு நேர் கண்டிருக்கின்றேன். ஒரு லொறியில் இருபது இருபத்தைந்து பெயரை ஏற்றிக்கொண்டு போனபோது நான் அவர்களைக் கண்டேன். அப்பாடா! பேயோ பூதமோ என்று சொல்லுகிருர்களே, அதைத் தழுவிக்கொள்ளச் சொன்னலும் நான் ஆயத்தம். ஆனல் இந்நோய் வந்தவர்களை நான் கண்ணெடுத்துக் கூட இனிமேற் பார்க்கவும் முடியாது. அவ்வளவு பயங்கரமாயிருந்தது அவர்கள் முகம் எனக்கு. நோய்வந்தவர்களாய்க் காம்பில் கொண்டு போய்ப் போடப்பட்டுத் தப்பிப் பிழைத்து வந்தவர்களைப் பார்த்து, உங்களை எப்படிப் பராமரித்தார்கள் என்று நான் கேட்ட போது "எல்லாம் ஒன்றுதான்; விதி பலமாயிருந்தால் வீடும் சரி, பராமரிக்கும் ஸ்தலமும் சரி" என்று வெறுப்போடு சொன்னார்கள்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்:

# விசுவாமித்திர சிருட்டி

ஒருநாடு தனது தாய்மொழி மூலமே முன்னேறவேண்டுமென்று எல்லோருமொப்புவர். நமது இலங்கையிலும் சுயபாஷைக்கு முதலிடமளிக்க வேண்டிச் சிலநாட்களாகப் பூர்வாங்க நடவடிக்கையாற் பிரயத்தனங்கள் செய்யப்பட்டுவருகின்றன. ஆங்கிலம் இரண்டாம் பாஷையில் மதிக்கப்படுமென்று கூறப்படுகிறது.

ஆனல் கல்வி மந்திரியுங் கல்வி நிர்வாகசபையுஞ் செய்துவரும் தீர்மானங்கள் இவற்றுக்கு முரண்பட்டனவாகும். தாய்ப்பாஷை முன்னேறுவது கருத்தாகுமானல் 5-ம் வகுப்பு வரையிலாதல் அது முதலிடம் பெறவேண்டுமென்று யாரும் ஒப்புக்கொள்வர். அங்ஙனமிருப்ப மூன்ரும் வகுப்புப் படித்தவுடனும் ஆங்கிலக் கல்வியை நாடலா மென்றிருப்பது ஒன்றுமறியாத சனங்களை ஆங்கிலத்தில் அமோகமான மனமோகத்துடன் புகச் செய்கிறது. ஆங்கில கலாசாலைகள் மழையை எதிர்கொள்ளுஞ் சகோரம் போல எல்லா மாணவரையும் கலாசாலையில் இடம் போதாதிருப்பவும் சந்தோஷமாக வரவேற்று பசரிக்கின்றன.

இம்மாணவர்கள், ஆங்கிலகலாசாலைகளிற் பிணிக்கப்படுவதால் பெறும் பயன் என்ன? இலவசக் கல்விக்காகப் பலமைல் தூரம் நடந்துவரும் பயன் எவ்வளவு?

இம்மாணவர் 5-ம் வகுப்பு வரை தமிழையோ சிங்களத்தையோ கற்பது கட்டாயமானல், கிராமங்களில் முன்னரே நடந்துவரும் பாடசாலைகள் அவற்றை வைத்து நடத்துவதற்கான சட்டம் வேண்டும். அது முன்னிருந்ததுபோல் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில கலாசாலைகள் நடத்துவதற்கு அனுமதியாததாய் அமையவேண்டும்.

அன்றி இக்கொள்கையை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் கல்வி நிர்வாகத்தாருடைய போக்கு வருந்தத்தக்கது. அவர்கள் "எது செய்வதென்ற நிலைபேருன முடிவில்லாது செய்துவரும் ஒருசெய்கையாக இது இருக்கிறது. வெளியுலகிலும் அரங்கங்களிலும் கல்வி நிர்வாகசபையைச் சேர்ந்தவர்கள் செய்துவரும்பிரசாரமோ சுயபாஷாபிவிருத்திக்குநிரம்பஇடமிருப்பதாக மனத்தொடு பொருந்தா வாய்மையாகப்பேசப்படுகிறது.

**கல்வியுலகின் மாற்றங்கள்**

இவ்வாருகக் கல்வி பெறும் மாணவர் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகின்றது. அவர்கள் என்ன செய்வார்கள். இயற்கையாகவே ஆங்கிலத்துக்குரிய அந்தஸ்தை உன்னிப் பல மைல் நடந்து வருகிறார்கள். நடந்த இளைப்பே அவர்களுக்குக் கல்வியாக முடிகின்றது. இந்தக் குழப்பமான ஆண்டுகளிலே கல்விபெற இருந்த மாணவர் அதிஷ்டம் எப்படிப்பட்டதென்று கூறவேண்டியதில்லை. தாய்மொழியையாதல் ஆங்கிலத்தையாதல் சரிவரப் பெறக்கூடாத நிலையிலிருக்கும் மாணவர் நிலை பரிதபிக்கக்கூடியதாகவன்றே இருக்கிறது.

முன்னொருநாள் பிரமன் முதலாக எல்லோரையும் படைப்பேனென்று விசுவாமித்திரமுனிவர் தொடங்கினராம். இதனையே கம்பநாடரும் "அயனையும்படைப் பனீண்டெனக் கூறிய கோசிக முனிவன் தோற்றிலன்" எனவோரிடத்துக் கூறுவர். இம்முனிவர் மனிதரைப் படைக்கக் குரங்காயிற்றென்றும், மூஷிகத்தைப் படைக்க அது மூஞ்சூறுயிற்றென்றுங் கூறுவர். இச்செய்கையைச் சுயபாஷையிலேயே நீதிவிசாரணை முதலாகப் பொது சனங்களை விரும்பக்கூடிய முறையிலே நடப்பதற்கு ஏற்பாடு செய்கிறேம் என்று கூறிக்கொண்டு மறைமுகமாக ஆங்கிலக் கல்வியையே முதற்பாஷையாக்கமுயல்கிற நமது நிர்வாகத்தார் செய்கைக்கு ஒப்பாகச் சொல்வதில் யாதும் பிழையில்லை என்றே தெரிகிறது. —பாஷாபிமானி

* * *

### சுவபாஷா ஆசிரியர்களின் எதிர்காலம்

மருதாவன மத்திய பாடசாலையில் 25-4-46 ல் நடைபெற்ற தொழிற் சங்கப் பிரமாணப்படி பதிவு செய்யப்பட்ட அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கக் காரியதரிசி, திருவாளர்கள் டக்ரர் என். எம். பெரைரா, அரசாங்க சபைப் பிரதிநிதி பி. டி. எஸ். குலரத்ன, உதவி வித்தியாதிகாரி C. T. லொருஸ், இவர்கள் சமூகத்தில் கல்வி மந்திரியாரையும் அவருடைய நிர்வாக சபை அங்கத்தவர்களையும் சுயபாஷா ஆசிரியர்களின் சம்பள விஷயமாக அவர்கள் சிபார்சு செய்த சம்பளத் திட்டத்தை வரவேற்றுப் பேசியபின்பு சுயபாஷா ஆசிரிய சங்கத்தின் வருங்காலத் திட்டத்தைப்பற்றி பின்வருமாறு பேசினர்.

முதலாவதாக: இலங்கையிலுள்ள அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும், அகில இலங்கைச் சுவபாஷா (சிங்கள) ஆசிரியர் சங்கமும், திறேட்யூனியனைச் சேர்ந்த அகில இலங்கைச் சுவபாஷா (சிங்கள) சங்கமும் ஒன்றுகச் சேர்ந்து ஒரு சங்கமாக நின்று தமது குறைகளுக்காக வாதாடுதல்.

இரண்டாவதாக: அகில இலங்கைச் சுவபாஷா ஆசிரியர் சங்கம் (தமிழ் சிங்கள) ஒரு பத்திரிகையை நடாத்துதல்.

மூன்ருவதாக: ஒரு தலைமைக் காரியாலயம் கொழும்பிலும் கிளைக்காரியாலயங்கள் ஒவ்வொரு மாகாணத்திலும் வைத்திருத்தல்.

நாலாவது: தற்போது வேலையற்றிருக்கும் சகல ஆசிரியர்களும் இச்சங்கத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் மாதம் மாதம் ஒரு ரூபா வீதம் சங்கத்திற்குக் கொடுத்தால் மாதம் மாதம் 20000 ரூபா சங்கத்திற்கு வருமானம் வரும். இப்பொழுது வேலையற்றிருக்கும் 300 ஆசிரியர்களுக்கும் ஆளுக்கு மாதம் 40 ரூபா வீதம் கொடுத்தாலும் 12000 ரூபா செலவாகும். மிகுதி 8000 ரூபாவும் சங்கத்தின் மூலதனத்தைச் சேரும். வேலையற்றிருப்போர் ஒவ்வொரு கிளைச் சங்கங்களிலும் வேலை பார்ப்பார்கள். பாடசாலைகள் தோறும் சென்று பணம் வசூலிப்பார்கள். இதனல் ஒரு பாடசாலையிலுள்ள பிள்ளைகளை மற்றப் பாடசாலைக்கு உத்தியோகத்திற்காக இழுக்கும் அருவருப்பான வேலை நின்றுவிடும். 500 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரை முகாமையாளருக்குக் கைக்கூலி கொடுக்க முன்வரும் வேலையற்ற ஆசிரியர்களின் தொல்லை நின்றுவிடும். ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு ஆசிரியரும் இச்சங்கத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். அப்பொழுது வித்தியாபகுதியாரும் முகாமையாளரும் தமது பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தேவையென்ருல் ஷை சங்கத்திற்கு விண்ணப்பம் செய்வார்கள். ஷை சங்க நிர்வாக சபையின் தீர்மானப்படியே ஒவ்வொரு ஸ்தாபனங்களுக்கும் ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள்.

ஐந்தாவதாக: நாம் நமது காலிலேயே நிற்கப் பயிலல் வேண்டும். எமது குறையைநீக்க நம்மாலேயல்லாமல் வேறு ஒருவராலும் முடியாது. மற்றவர்கள் நமது நலங்களைப் பாதுகாக்க முன் வருபவர்கள்போல் நடிப்பவர்களேயல்லாது உண்மையாக எமக்காக ஒன்றும் தியாகம் செய்யமாட்டார்கள். ஆகையால் இனிவரப்போகும் பாராளுமன்றத்திற்கு நாம் எமது பிரதிநிதி ஒருவரையாவது அனுப்பவேண்டும்.

K. கந்தையா

செயலாளர், அ. இ. த. ஆ. ச.

வெளிவருகிறது!

நளவெண்பாச் சுருக்கம்

— உரையுடன் —

புதிய பதிப்பு

(ஆங்கில J.S.C. வகுப்புக்குரியது)

தனலக்குமி புத்தகசாலை

சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நூற்றல்

'கதர் அபிமானி'

இன்று நூல் நூற்போர் சமாளிக்க வேண்டிய எதிர்ப்புகள் பல. அவற்றுள் சாமானியமானவற்றைத் தீர்த்தும் வைப்பதற்கு இங்கு சில யோசனைகள் கூறுகின்றேன்.

மைந்தன் ஒருவன் தன் பிதாவை நோக்கி நூல் நூற்கப் போகவேண்டாம் என்று, ஏன் தடுக்கிறீர்கள் என்று வினவ பிதா அதற்குக் கூறுவதாவது:

பஞ்சு பறந்தால் தரித்திரம்; கையால் நூல் நூற்றல் ஒரு மி(வி)னைக் கெட்டவேலை. பறையர் செய்யுந் தொழில்; காந்திப் பைத்தியங்களிலொன்று. கதரின் விலையோ அதிகம். அரசாங்கத்துக்குப் பிடிக்காதது. முரட்டுத் துணிதான். கைநூலாற் செய்ய முடியும். கிழிந்தால் தைக்க முடியாதது. தேவைக்கேற்ப உற்பத்தி செய்ய முடியாதது. நாள் முழுதும் ஒரு பறையன் செய்யக்கூடியது ஒரு முரட்டுச்சேலை.

மகன் கூறும் சமாதானம்:

1. ஏனப்பா! பஞ்சைப் பறக்க விடுவான். மரத்தில் காய்கள் வெடித்தவுடன் பஞ்சை அழகிய வெள்ளைப் புஷ்பம் போல் சேர்த்து வைத்துக்கொள்ளலாமே.

2. நூற்றலும் ஒரு வேலை. அது வேறு வினை எதையும் கெடுக்காமற் செய்யக்கூடியது. வீண் நேரங்களையெல்லாம் பொருளாக மாற்றிக்கொள்ள அதன் மூலம் வசதியுண்டு. உதாரணமாக, இம்முறை, விடுமுறைத் தினங்களை வெய்யிலிற் காய்ந்து பைசிக்கிள் ஓடி, கைகால் நோவுண்டு, நீங்கள் கஷ்டமான வேலை செய்து உழைத்த பணத்தையும் பைசிக்கிள் கடைக்காரனிடம் கொடுப்பதற்குப் பதிலாக நீங்கள் கேலி செய்த கரையாரின் வடிகதிர் தக்ளி முறையில் நூல் நூற்றுப் பழகுந் தறுவாயிலேயே ரூபா 2-50 சம்பாதித்தேன். ஆனால், ராட்டையில் இவ்வருவாயை இரட்டிக்கலாம். பயிற்சி ஏற்பட ஏற்பட வருவாய் மும்மடங்கு நான்கு மடங்காகும். முழுநாட் கூலி, நான்கு சிட்டநூலுக்கு • ரூபா 1/ இதனால் எனது படிப்பிற்கு உற்சாகமே தவிர தீமை யாதும் இல்லை.

3. எங்கள் மூதாதைகள் நெசவு தொழிலை மட்டுமே பறையர்களிடம் விட்டனர். ஆனால் பிராமணரும் ஏனையோரும் நூல் நூற்றனர்.

4. காந்தியின் பைத்திய வேலை என்று கூறினீர்கள். அப்படியல்ல, கூறுகின்றேன் கேளுங்கள்:

இந்தியாவில் அநேக காலமாகச் சமாளிக்கமுடியாமல் இருந்த வேலையில்லாத் திண்டாட்டமும், பட்டினியும், மகாத்மாவின் கதர் இயக்கத்தால் ஓரளவு குறைந்திருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சி நிலவிய காலத்திலும் இன்றும் அரசினர் உத்தியோகஸ்தர்கள் கூடக் கதரை ஆதரித்துவருகின்றனர். இதற்குமுன் மில்த்துணிகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படும் 'மான்செஸ்ரரில்' நடந்த வரவேற்பொன்றில், மகாத்மா காந்திக்குக் காலால் உழக்கும் பைசிக்கிள் வண்டி ஒன்று அவரின் கொள்கைகட்குக் கௌரவம் செலுத்தும் முறையில் அளிக்கப்பட்டது. யந்திரங்கள் எல்லாவற்றையும் அழிப்பது மகாத்மாவின் நோக்கமன்று. அவைகளின் பிரயோசனத்தைச் சீர் செய்யவும்; மனிதனை அவைகளின் சக்திக்கு அடிமையாகாதிருக்கச் செய்யவுமே அவர் பாடுபடுகின்றார்.

காந்தியடிகளின் தத்துவத்தை எதற்காக ஏற்க மறுக்கின்றீர்கள்? உலகமே யுத்தங்களாற் பாழாகி உண்ண உணவிற்கும் உடுக்கத் துணிக்குங் கஷ்டப்படுகின்றது.

பொதுவுடமை ருஷியாவும் நிலை தடுமாறிப் பொதுமக்களை யந்திரங்களின் பொம்மைகளாக்கித் தனிமுயற்சி சுவாத்தியம், ஆத்ம வளர்ச்சி யாவையும் பறிமுதல் செய்துகொண்டு விட்டது. இரண்டாம் உலக யுத்தத்திற்குமுன் அதற்கு இருந்த மரியாதையும் தன்னம்பிக்கையும் அதற்குத் தற்பொழுது இல்லை.

5. கதரின் விலை அதிகந்தான். ஆனால் அதற்குச் செலவிடும் பணத்தின் பெரும்பகுதி நாட்டிலேயே தங்கி எங்கள் பொருள் ஆக்கத்தைப் பெருக்குகின்றது. மில் துணி நாட்டைப் பஞ்சப்படுத்தும் முறையிற் பணத்தை வெளிநாடுகளுக்கு அள்ளிக்கொண்டு போகின்றது.

6. நாட்டில் விவசாயத்தையே முறைப்படி செய்ய அல்லது செய்விக்கத்தவறிய அரசினரை எவ்விதம் எங்கள் ஆக்க வேலைகளை மெச்சச் செய்வது.

7. இதோயான் நூற்கும் நூலைப் பாருங்கள். முரட்டுத் துணிதானா இதனால் செய்ய முடியும்? உண்மையில் யான் கட்டியிருக்கும் அவுஸ்றேலியன் மாத்துணியிலும் நேர்த்தியான துணி தயாரிக்கலாம். "நூலைப் போல் சேலை......" என்பது முதுமொழி.

8. கிழிந்தால், தைப்பது சிரமந்தான். ஆனால் நல்ல நூலில் செய்யப்படும் கதரில் அக்கஷ்டமில்லை. நீங்கள் இன்னும் இலங்கையிலே தயாரித்த கதரைப் பார்க்கவில்லை. அதிகமாக நூற்றால் விரைவில் இலங்கைக் கதர்த் துணியைக்கொண்டு மகிழ்வீர்கள்,

9. முரட்டுத்துணி என்ற பேச்சு இனி வேண்டாம். ஒரு நெசவாளன் ஆறுயார் சேலை அல்லது நான்குமுழவேட்டி இரண்டும் தயாரித்தாலும் எவ்வளவோ கதர் உற்பத்திக்கு இடமுண்டு.

## சர்க்கரை விநியோகம்

தமது சொந்த உபயோகத்துக்கு மாத்திரம் தேவைப்படுபவர்களுக்குச் சர்க்கரை பெறக்கூடியதாக இருக்கிறது. விண்ணப்பப் பத்திரங்கள் அவ்வப்பகுதிகளிலுள்ள இறையதிகாரிக்கோ (D. R. O.) அல்லது மணியகாரருக்கோ அனுப்பப்படவேண்டும். சர்க்கரை விநியோகத்துக்காக நியமிக்கப்பட்டிருக்கும் வியாபாரிகளுக்கு, விண்ணப்பதாரரின் பேருக்கு (Permits) இவர் வழங்குவார்.

M. ஸ்ரீகாந்தா
உதவி மாகாண அதிபதி
7-5-46 யாழ்ப்பாணம்

வாழ்க்கைச் சித்திரம்

## வேதாந்தி

சொக்கன்

ஆமாம்; அவனும் ஒரு வேதாந்தி. வேதாந்தி ஞானக்கண்கொண்டு பார்க்கிறான். இவன் வறுமைக் கண்கொண்டு பார்க்கிறான். இருவருக்கும்உலகம் வெறுமையாகவே காட்சியளிக்கிறது. அப்பொழுது அவனும் ஒரு வேதாந்திதானே.

பறட்டைத் தலை. குழிவிழுந்த கண்கள்· கங்காளஉடல். இவை அவனின் வறுமையை உணர்த்திக்கொண்டிருந்தன.

அவன் என்றும் வறுமையிலேயே வாழ்ந்தானா? வெறுமையுடன் கூடப்பிறந்தானா?

இல்லை. பின்...... பெருமையிற் பிறந்து சிறுமையில் மிதந்து வறுமையில்வாடுபவன் அவன்.

* * *

இருபத்தைந்துவருடங்களின் முன்...............

சுந்தரன் குடும்பம் உணவுக்கும் உடைக்குந் தட்டின்றி வாழ்ந்து வந்தது. அந்தக்காலத்தில் ஆள் ஒரு ஆஜானுபாகு. நல்லம்மா இவன் சகோதரி. இருவரும் தாய் தந்தையரின் செல்வத்தில் வளர்ந்தார்கள். அந்த ஊரிலே நல்லம்மாதான் ஓர் அழகி. அத்துடன் நல்ல குணமும் நிறைந்தவள்.

இராமசாமிமுதலியார் அவ்வூரிலே பெரிய பணக்காரர். பிரபுத்துவம் அவருக்குப் பெருந்தன்மையை மறைத்து அகம்பாவத்தையும் பணத் திமிரையும் அளித்தது. குடியும் கூத்தியும் அவர் அதி தேவதைகள். பெண்களை அவர் தாம் குடிக்கும் மதுக்கிண்ணத்தின் அந்தஸ்தைக்கொண்டே மதித்தார். முள்ளில் ரோஜாபோல அவர்களை அவர் நினைத்திருந்தால்...............

சிலநாட்களாக முதலியார் குளக்கரையில் வட்டமிட்டுக்கொண்டிருந்தார். அவர் இரும்பு மனதை நல்லம்மாவின் அழகாகிய காந்த மிழுத்ததுதான் அதற்குக் காரணம். ஒருநாள் அவர் அவளைப் பலாத்காரம் செய்ய முயன்றார். பணத்தால் உடலை விலைக்கு வாங்கலாம். ஆனால் உள்ளத்தை வாங்க முடியாதே! இது தெரியவில்லை அவருக்கு.

இதன் பயன் அவருக்குக் கைமேற் பலன் கிடைத்துவிட்டது. சுந்தரன் கைவரிசையை அனுபவித்த முதலியார் வைத்தியசாலையில் அதிதியானார். அத்துடன் சும்மா இருந்தாரா?


சுந்தரனை எதிரியாகக்கொண்டு நீதிஸ்தலத்தில் வழக்கு நடந்தது. பணத்துக்கும் நீதிக்குமிடையே நடந்த போராட்டத்தில் பணம் வெற்றிபெற்றுவிட்டது. சுந்தரன் குற்றவாளியாகக் கருதப்பட்டுப் பதினைந்துவருட சிறைவாசத்தையும் முதலியார் மானநஷ்டத்துக்குத் தன் பொருளையும் கொடுக்க நேர்ந்தது.

சிறையிலிருந்து பதினைந்துவருடங்களில் அவன் வெளிவந்தான். ஆனால் அவன் யௌவனமும் அழகும் மீளா முறையில் சிறையில் அடைபட்டுவிட்டன. கட்டழகன் போய் கங்காள ரூபன் வெளிவந்தான். தன் குடும்பத்தைப்பற்றி அவனுக்கொன்றும் தெரியாது.

உலகத்தின் முன் அவன் ஒரு குற்றவாளி. பெரிய மனிதன் ஒருவனை அவமானமடையச் செய்தவன். பெரிய மனிதன் என்ற போர்வையைப் போர்த்துக்கொண்டு அதனுள் வாழ்ந்த அக்கிரமப் புலியை உலகம் கண்டுகொள்ளவில்லை. அதுதான் கண்கெட்ட உலகமாயிற்றே. மோட்சம் ஒன்று இருப்பது உண்மையானால் அவன் தியாகத்தின் பலனை அங்கு அனுபவித்தே தீருவான்.

### அளவெட்டி சைவ வாலிப சங்கம்

சென்ற 27-ந் திகதி சனிக்கிழமை மாலை 7 மணியளவில் நாவுக்கரசர் குருபூசைத்தினத்தை முன்னிட்டு அளவெட்டி, அழகொல்லை விநாயகராலயத்தில் மேற்படி சங்க ஆதரவில் சங்கத்தலைவர் திரு. அ. பொன்னுத்துரை ஆசிரியர் அவர்கள் தலைமையில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமையம் தென்மயிலைச் சைவப்பிரசாரகரும் செந்தமிழ் இன்னிசைச் செல்வியுமாய ஸ்ரீமதி சோ. காஞ்சனமாலை அம்மையாரவர்கள் 'தொண்டு காட்டிய தூய உள்ளம்' என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.




ஆம், நீங்கள் லக்ஸ்டொயிலெட் சோப்பினால் உங்கள் சருமத்தை எவ்வளவு காலத்துக்கு மிருதுவாகவும், பிரகாசமாகவும் வைத்திருக்கும்வரைக்கும் உங்களுடைய அழகு சேமமாயிருக்கும். ஆனபடியால் இந்த இன்றியமையாத அழகு சோப்பை மிகவும் கவனமாக உபயோகிக்கவும். ஒவ்வொரு கட்டியையும் இவ்விதம் நீடித்து நிற்கச் செய்யலாம் என்பதை அறிந்துகொள்ளவும். அதனால், நீங்கள் விரும்பும் லக்ஸ் சோப் எல்லாம் பெற்றுக்கொள்வது கஷ்டமாயிருக்கும் காலத்திலும் உங்கள் சருமத்திற்குத் தினசரி அத்தியாவசியமாக அழகு கொடுப்பதற்கு நீங்கள் போதுமானதை இன்னும் வைத்திருக்கமுடியும். சோப்பைப் பாதுகாப்பதற்கு இந்த 3 நிபந்தனைகளையும் பின்பற்றுங்கள்.......

**உலரவைத்தல்:** உபயோகித்தபின்னர் அதைக் கம்பிக்கூடை அல்லது அது போன்ற நீர்வடிக்கும் சிறுபாத்திரத்தில் வைக்கவும். இப்படியாக உலர வைத்தால் வீணாகத் தேய்ந்து அல்லது உடைந்துபோகமாட்டாது. மெல்லிய துண்டாக வரும்வரைக்கும் உபயோகிக்கலாம். ஒருபோதும் தண்ணீருள் ஊறவிடவேண்டாம். சிறிது நேரத்திற்காவது தண்ணீருள் சோப்கட்டியை வைக்கவேண்டாம்; தண்ணீரோடும் குழாயின் கீழும் வைத்திருக்கக் கூடாது. சோப் மிகவும் விரைவில் கரைந்துபோகிறது.

**புதியதில் பழையதை ஒட்டுதல்:** தேய்ந்துபோன சிறு துண்டுச் சோப்பை ஒருபோதும் எறிந்துவிடக்கூடாது. பழையகட்டியில் மீந்திருப்பதைப் புதியதுடன் சேர்த்து ஒட்டிவிடுதல்வேண்டும்.—இரண்டையும் நனைத்து ஒன்றுடனொன்றைச்சேர்த்து அமர்த்திச் சிறிதுநேரம் உலரவிடவேண்டும். இவ்விதம் தேய்ந்துபோன பழைய சோப்கட்டியை இறுதிவரைக்கும் உபயோகிக்கமுடியும். இந்த முறையில் எவ்வளவு சோப் மீதமாகிறதென்று நீங்கள் பிரமிப்பீர்கள்.




## லக்ஸ் டொயிலெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்

வெளிவந்துவிட்டது வெளிவந்துவிட்டது

வே. சிவக்கொழுந்து அவர்கள்
எழுதிய

## புதிய பூமிசாத்திரம்

(ஐந்தாம் வகுப்புக்குரியது)

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
விலை சதம் 90


தனலக்ஷுமி புத்தகசாலை
சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest Circulation in Ceylon India & Malay States

Vol. 16 | Chunnakam, Sunday May, 12, 1946 | No. 40

**நற் சுகத்திற்கு**




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2741]

## குருபூசையும் பிரசங்கமும்

சென்றமீ 27உ சனிக்கிழமை பகல் மறவன்புலோ சகலகலாவல்லி (H. B E.) வித்தியாசாலை மண்டத்தில் திருநாவுக்கரசுநாயனார்குருபூசை சிறப்பாகநடைபெற்றது. பிரம்மஸ்ரீ மு. சுப்பிரமணிய ஐயரின் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயது‌ம், பண்ணைல திரு. பொ. முத்துக்குமாரு, திரு. பொ. தெய்வேந்திரம் என்போரால், தேவார பஜனை நடாத்தப்பெற்றது. அதன்பின் திருவாளர் க. திருநாவுக்கரசு அவர்களால், திருநாவுக்கரசுநாயநாயனார் சரித்திரம் பக்கவாத்திய சகிதமாகக் கதாப் பிரசங்கம் செய்யப்பெற்றது.

## நிலாவரை நீர்ப்பாசனம்
### திட்டம் ஆரம்பம்

புத்தூர் நிலாவரையில் இருந்து நீர்ப்பாய்ச்சுவதற்குரிய இயந்திர வகைகள் எல்லாம் சென்ற மாதம் கொழும்புக்கு வந்துவிட்டன. இந்தமாதக் கடைசியில் இயந்திரவகைகள் எல்லாம் நிலாவரைக்கு வந்துவிடும். இந்த இயந்திரவகைகள் இணைக்கப்பட்டபின் இந்த மாதத்திலேயே நீர்ப்பாய்ச்சுதல் ஆரம்பமாகி 5 மாதத்துக்கு அடுத்து இறைக்கப்படும். இப்படியாக இறைக்கப்படும் தண்ணீரை வீண் போகாமல் உணவு உற்பத்திக்குப் பயன் படுத்திக் கொள்ளவேண்டியது கமக்காரர்களது கடமை. இந்தத் தண்ணீர் நிலாவரைக்குத் தெற்குப் பக்கமாக உள்ள வாய்க்கால் வழியாக விடப்படும். புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி, நீர்வேலி வடக்கு இந்த 4 பகுதிகளுக்கும் இந்தத் தண்ணீர் போகக்கூடியதாக நில அமைப்பு இருக்கிறது. முதலில் வெறும் செம்பாட்டு நிலங்களை இத்தண்ணீர் குளிர்மைப் படுத்து இறது; அதன்பின் தோட்டங்களுக்கூடாகப் போய், கிராமங்களில் உள்ள வெள்ளவாய்க்கால்கள் மூலமாக வயல்களுக்குப் போகிறது. வயல்களைக் கடந்து எஞ்சிய நீர் கடலுக்குப் போகும். ஆனால் கமக்காரர்கள் கூடியவரையில் கடலுக்கு நீர் போகாத விதமாகத் தடைசெய்து மேற்கொண்டு வேறு நிலங்களைப் பாய்ச்சச் செய்யவேண்டும்.

இவ்விதமாக நீர்ப்பாய்ச்சப்பட்ட நிலங்களில் உணவுப் பொருள்களைப் பயிரிட முயற்சியெடுக்கவேண்டும். செம்பாட்டு நிலங்களில் சாமி, குரக்கன், கறுத்தச்சாமி, காராமணி, பயறு, எள்ளு, கொள்ளு, உழுந்து, வரகு முதலிய தானிய வகைகளைப் பயிரிடலாம். தோட்ட நிலங்களில் ஷை தானிய வகைகளுடன் கிழங்கு வகைகளும் உண்டாக்கலாம். மிளகாய், காய், கறி வெண்காயம், உள்ளி, வகைகளும் பயிரிடலாம். விரும்பிய பயிர்வகைகள் பயிரிட்டுக் கமக்காரர் இந்த சந்தர்ப்பத்தை தங்கள் உணவை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

கடந்த சனிக்கிழமை (4-5-46 ல்) வலி, கிழக்கு காரியாதிகாரியின் காரியாலயத்தில் ஸ்ரீ M. ஸ்ரீகந்தா (A. G. A. E.) அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்துக்குக் கிராமாதிகாரிகளும், கமக்காரர்களும், ஐக்கியப்பகுதி உத்தியோகஸ்தர்களும் புத்தூர் கிராமப் புனருத்தாரணப் பகுதி உத்தியோகத்தரும் சமுகமாயிருந்தார்கள். வைகாசி தொடக்கம் புரட்டாதி வரையும் நிலாவரையில் இருந்து நீர்ப்பாய்ச்சும் தண்ணீரை உணவு உற்பத்திக்குப் பயன் படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. சாமி, குரக்கன், உழுந்து, பயறு. வரகு முதலிய தானிய வகைகளும் மரவள்ளி, 'சீனட்டி' நெல்லு வெண்காயம் மிளகாய் முதலியனவும் பயிரிடுவதற்கு கமக்காரர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படும். கல்லு அதிகமான காணிகளைத் திருத்துவதற்குரிய உபகரணங்களும் பயிரிடுவதற்கு வேண்டிய உபகரணங்களும் இலவசமாகக் கொடுக்கப்படும். தண்ணீர் இல்லாத கிணறுகளை வெட்டி ஆழமாக்குவதற்கும் புதிய கிணறுகளை வெட்டுவதற்கும் இலவச பண உதவி செய்யப்படும். கமக்காரர்கள் தேவையான அரசாங்க இலவச உதவிகளுக்கு அந்தப் பகுதிக் கிராமாதிகாரிகள் மூலம் மனுச்செய்யவேண்டும். உடனே மனுச் செய்க.

யாழ்ப்பாணத்திலுள்ள கிணறுகளுக்கு சிறிய இயந்திரங்களை உபயோகித்து நீர்ப்பாய்ச்சுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு ஓர் தீர்மானமும் செய்யப்பட்டது. அச்சுவேலியில் உள்ள வற்றாத கிணறுகளுக்கும் இயந்திர வகைகளை உபயோகித்துப் பார்க்கப்படும். ஊரெழுவில் உள்ள "பொக்கணை"யிலும் நீர்ப்பாய்ச்சுதல் ஆரம்பமாகும். பொக்கணையைச் சுற்றியுள்ள கமக்காரர்களும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன் படுத்துவார்களாக. நல்லூரிலுள்ள "இயமநாரி"யிலும் இயந்திரம்உபயோகிக்கப்படுமம். இதிலிருந்து செம்மணி முதலிய இடங்களுக்கு நீர்ப்பாய்ச்சலாம். மாடுகளுக்கு உணவாக உள்ள வைக்கோல், தவிடு முதலியவற்றைப் பிற இடங்களில் இருந்து கொண்டு வருவதற்குரிய வசதிகளையும் A·G·A.E. மூலம் பெற்றுக்கொள்ளலாம். கமக்காரர்கள் பல காலமாக எதிர்பார்த்த நிலாவரைத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. இப்பொழுது 5 மாத காலமும் பரிசோதனைக்காகவே இறைக்கப்படுகிறது என வலி, கிழக்குக் கமத்தொழிற் சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

**SAMUEL SONS & Co., Ltd.,**

*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON — T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO

- இரும்பு: கம்பிகள், கேடர்கள், சிலாகைகள், அச்சுகள், தகடுகள்
- நீர் இறைக்கும்: யந்திரங்கள், குழாய்கள், தாங்கிகள்
- கல்வனேஸ்: தகடுகள், தாங்கிகள், வாளிகள்
- கைத்தொழிற்குரிய: ஆயுதங்கள் மற்றும் கமத்தொழிற் கருவிகளும்
- பித்தளை: தகடுகள், பூட்டுகள், பிணைச்சல்கள்
- மைவகைகள்: மை எண்ணெய், வாணீஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்**

ஆஸ்பத்திரிரோட் : : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' — 'போன்: 62

2740

பரமேஸ்வரக் கல்லூரி

**களியாட்டு விழா**

ஆனந்த பரவசமளிக்கும் அற்புதங்கள்
கிருஷ்ண பரமாத்மாவின்
துவாரகைக் காட்சி

**இராமநாதன் நகர்**

இழமண்டலம் — சேரமண்டலம்
சோழமண்டலம் — பாண்டிமண்டலம்

பூவுலகில் இந்திரலோகம்
சிங்கார கானங்கள்
ஒய்யார நடனங்கள்
சமூக வாழ்வைச் சித்திரிக்கும்
சங்கீத நடனங்கள்

பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின்
பௌத்திரி - பரதநாட்டியக் கலையரசி
**பந்தநல்லூர் ஜயலட்சுமியின்**
பரதநாட்டியம்

உலகப் பிரசித்திபெற்ற கோபிநாத்
அவர்களது பிரதம சீஷன்
★ **சந்திரசேகரனதும்** ★
கோஷ்டியாரினதும்
கதாகளி

**பரமேஸ்வரக் கல்லூரி முன்றிலில்**

மே 14 தொடக்கம் 21 வரை
தினந்தோறும் பிற்பகல் 4 மணி தொடக்கம் கண்டானந்திக்கலாம்
**பிரவேசம் 25 சதம்**

சினிமா புகழ் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைவிருந்து 29-5-46

[2749–ii]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org